காலை உணவு அப்பம், பிட்டு, இடியப்பம்
மதிய உணவு இறைச்சி மீன், மரக்கறி சோறு
மாலையில் றொட்டி, கொத்துறொட்டிகளுக்கு
தேனமுதம்
452, கேணல் கிட்டுசாலை, [ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம்.

மக்கள்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பிறந்த நாள், திருமண நாள் கொண்டாட்ட கேக்,
ஐசிங் கேக் வகைகள் மற்றும்
பொம்பே சுவீட்ஸ், மட்டன்றோல், பற்றிஸ்
வகைகளை ஓடர்செய்து பெறவும், உடன் சுவைக்கவும்
தேனமுதம்
452, கேணல் கிட்டு சாலை, [ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 25 சனிக்கிழமை (08 – 04 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 132

## இன்றைய சூழ்நிலையில் அரசியல் பேச்சுக்கு கால அட்டவணை உகந்ததல்ல

# முடிவு காணப்படாத அன்றாட பிரச்சினைகள்

# குறித்தே 4ஆம் கட்டத்தில் பேச வேண்டும்

## பத்தாம் திகதியை நிர்ணயித்து தலைவர் பிரபா ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

எரிபொருள் தடை நீக்கம், மீன்பிடித் தடையை முற்றாக நீக்குதல் ஆகிய முடிவுகளை சீரான முறையில் செயற்படுத்துவது குறித்தும் —

பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்திற்கு ஒரு பாதையைத் திறப்பது, கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதித்தல் ஆகிய தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்துமே—

நான்காம் கட்டப் பேச்சுக்களின் போது ஆராயப்பட வேண்டும் என்று –



தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பிய கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையை நாளை மறுதினம் திங்கட்கிழமை —பத்தாம் திகதி—நடத்தலாம் என்றும் தலைவர் பிரபாகரன் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*எமது மக்கள் மீது விதிக்கப்பட்ட தடைகள், கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதும் —*

*போர் நிறுத்தம் நிலையானதாகி, உறுதியான சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதும் —*

*அதன் பின்னரே உயர்மட்ட ரீதியில் அடிப்படையான அரசியல் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடாகும்.*

*எனவே இன்றைய சூழ்நிலையில் அரசியல் பேச்சுகளுக்கான கால அட்டவணை நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது போன்ற விடயங்கள் பற்றிப் பேசுவது உகந்தது அல்ல என்றே நாம் கருதுகிறோம் — என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-*

*தலைமைச் செயலகம்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்,*
*யாழ்ப்பாணம்,*
*6 ஏப்ரல் 1995.*

*கனம், சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா*
*சிறிலங்கா ஜனாதிபதி*
*ஜனாதிபதியின் செயலகம்*
*கொழும்பு.*

*அன்பின் ஜனாதிபதி அவர்கட்கு,*

*உங்களது, 1 ஏப்ரல் 1995 திகதியிடப்பட்ட கடிதம், யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக, 2 ஏப்ரல் 1995 அன்று எமக்குக் கிடைக்கப் பெற்றது. மிகவும் நன்றி.*

*அரசாங்கத்தின் சமாதான தூதுக்குழுவினர் 10 ஏப்ரல் 1995 அன்று யாழ்ப்பாணம் வருவதை நாம் வரவேற்கிறோம். பேச்சுக்களில் பங்குபற்றவிருக்கும் உங்களது தூதுக்குழுவினரின் பெயர் விவரங்களை அறியத்தரவும்.*

*நீங்கள் ஏற்கனவே எடுத்துள்ள சாதகமான முடிவுகளை உடன் செயற்படுத்தும் நடைமுறைபற்றியும், எனது கடிதத்தில் [28.03 1995] நான் குறிப்பிட்டுள்ள இரு முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது பற்றியும் நான்காம் கட்டப் பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரல் அமையுமென்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். 24 மார்ச் 1995, நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் எரிபொருள் மீதான தடைகளை நீக்குவதென்றும் மீன்பிடி மீதான சகல கட்டுப்பாடுகளையும் தளர்த்துவதென்றும் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்திருப்பதாக அறியத்தந்தீர்கள். அத்துடன், உங்களது முடிவுகளை சீரான முறையில் செயற்படுத்த இருதரப்பினரும் பேசவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தீர்கள்.*

*அதேசமயம் 28.03.1995 ல் நான் உங்களுக்கு எழுதிய கடிதத்தில் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு ஒரு பாதை திறக்கப்படவேண்டும் எனவும், கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடவேண்டும் என்றும் நான் வலியுறுத்தியிருந்தேன். இவ்விரு முக்கிய பிரச்சினைகள் பற்றியும், நீங்கள் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவது பற்றியுமே அடுத்த கட்டப் பேச்சுக்கள் அமைய வேண்டும். நீங்கள் எடுத்த முடிவுகளை உடன் செயற்படுத்தவும், மற்றைய இரு பிரச்சினைகளுக்கு உடன் தீர்வுகாணவும் அரசாங்கத்திற்கு கால அவகாசம் அளிக்கவே நாம் விதித்த காலக்கெடுவை 28.03.1995 ல் இருந்து 19.04.1995 வரை நீடித்தோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.*

*எமது மக்கள் எதிர்கொண்டு வரும் அவசரமான, அவசியமான நாளாந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அத்தியாவசியமானது என்பதை கடந்த ஆறு மாத காலமாக சமாதானப் பேச்சுக்கள் தொடங்கிய காலத்திலிருந்து நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது அன்றாடப் பிரசினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வுகாணப்பட்டால் தேசிய இனநெருக்கடிக்கு அடிப்படையாகவுள்ள பிரச்சினைகள் பற்றி பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு அது வாய்ப்பாக அமையுமென்றும் நாம்மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறி வந்திருக்கின்றோம்.*

*ஆயினும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதையும் எடுக்காது அரசாங்கம் காலம் தாழ்த்தி வந்ததால் பேச்சுக்கள் அர்த்தமிழந்து மந்தநிலை அடைந்தது. இந்தச் சூழ்நிலையில் தான் நாம் ஒரு காலக்கெடுவை விதிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம். பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் ஒரு தரப்பினர் என்ற ரீதியில் பேச்சுக்களில் இருந்து விலகிக்கொள்ளும் நோக்குடன் காலக்கெடுவை விதிக்கும் உரிமை எமக்குண்டு என்பதை நான் உங்களுக்கு கடைசியாக எழுதிய கடிதத்தில் விளக்கியிருந்தேன். பேச்சுக்கள் உருப்படியான பயனைத்தராது, எமது மக்களின் நன்மைகளைப் பேணாது, அர்த்தமற்றதாக இழுபட்ட காரணத்தினால் நாம் இந்த முடிவை எடுக்க நேர்ந்ததாக சுட்டிக்காட்டினேன். ஆயினும் நீங்கள் சாதகமான முறையில் பதில் எழுதியதால், உங்களது முடிவுகளை நடைமுறைப்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையிலும் ஏனைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பீர்கள் என்ற எதிர்பார்ப்பிலும் நாம் எமது காலக்கெடுவை 19 ஏப்ரல் வரை*

( 6ஆம் பக்கம் பார்க்க)

## கைதானவர் கொலைகுழுவின் தலைவராம்

கொழும்பு, ஏப். 8

வெள்ளவத்தையில் பொலீஸார் கைது செய்ய முயன்ற சமயம் "சயனைட்" அருந்தி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் இளைஞன் தேறியதையடுத்து பொலீஸார் நேற்று அவரை விசாரணை செய்தனர் என தெரிவிக்கப்பட்டது.

"புளொட்" தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.டி.பி செயலர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை கொலை செய்ய கொழும்பு வந்த குழுவின் தலைவர் இவர் என தகவல் வெளியாகியுள்ளதாக "லங்காதீப" நேற்று செய்தி வெளியிட்டது. (இ-3-6)

## பிரபாவின் கடிதம் பரிசீலனையில்

கொழும்பு, ஏப். 8

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவுக்கு அனுப்பிய பிந்திய கடிதம் குறித்து ஜனாதிபதி சிரேஷ்ட அமைச்சர்களுடன் நேற்றுக்காலை கலந்துரையாடினார் என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

இம்முறைப் பேச்சுகளில் கலந்து கொள்ள இரு அமைச்சர்கள் யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரியவந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-3-6]

## வவுனியாவில் தங்கியிருந்த அகதிகள் சொந்த இடம் திரும்புகின்றனர்

கொழும்பு ஏப். 8

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று திரும்பி வந்து வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் தாண்டிக்குளம் ஊடாக தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அரசு இந்த அனுமதியை வழங்கியதையடுத்து வவுனியாவில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலக அதிகாரிகள் அகதிகளை சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 64 குடும்பங்களை நாளை அவர்களது இடங்களுக்கு வாகனங்களில் அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 43 குடும்பங்களும் —

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 26 குடும்பங்களும்—

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 342 குடும்பங்களும்—

அவர்களின் சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப் படவிருக்கின்றனர். (இ-3)

## உதயன் செய்தி குறித்து அரச அதிபர்

"அரச அதிபர் ஊடாக அனுப்பிய மகஜர் ஜனாதிபதியைச் சென்றடையவில்லை — பாதிக்கப்பட்ட மாணவரிடம் சந்திரிகாவே தகவல்" — என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி தொடர்பாக யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் செய்தி அறிக்கை ஒன்றையும் கடிதம் ஒன்றையும் நேற்று 'உதயன்' அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார்.

ஆசிரியர் — உதயன் மற்றும் உதயன் முகாமைப் பணிப்பாளர் ஆகியோருக்கு கூட்டாக முகவரியிடப்பட்டிருந்த கடிதத்தில் அரச அதிபர் தெரிவித்திருந்ததாவது:-

உங்களுடைய இன்றைய பத்திரிகையில் முன்பக்கத்தில் "அரச அதிபருடாக அனுப்பிய மகஜர் ஜனாதிபதியைச் சென்றடையவிலலை" என்ற தலைப்பில வெளியான செய்தி.

முதற்கண் மேறபடி செய்தி தவறானது என்பதை அறியத் தருகின்றேன்.

இது சம்பந்தமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையை உரிய முக்கியத்துவம் கொடுத்து நாளைய [08 – 04 – 1995] பத்திரிகையில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வருங்காலத்தில் செயலகம் சம்பந்தமாக பிரசுரிக்க எண்ணும் செய்திகளை உங்களுடைய நலன் கருதியும், வாசகர்கள் நலன் கருதியும், இந்நிறுவனத்தின் நலன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மாணவர் விவகாரம்;

# 3 அமைச்சர்கள் கொண்ட ஆணைக் குழு

### ஜனாதிபதிக்கு அறிக்கைசமர்ப்பிக்கும்

கொழும்பு, ஏப். 8

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு சென்றுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்கள் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவில் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான, நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ், பிரதி உயர்கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதியில் மொத்த எண்ணிக்கையை அதிகரித்து பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு உதவுதல் —

அனுமதி தொடர்பாக புதிய கொள்கையை வகுத்து மாவட்ட மட்டத்தில் அன்றி பல்கலைக்கழகங்களின் வெற்றிடங்களின் அடிப்படையில் அனுமதியை வழங்குவது – போன்ற விடயங்கள் குறித்து இந்த ஆணைக்குழு ஆராய்ந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3-9]

## 'உதயன்' செய்தி குறித்து அரச அதிபர் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு

### அவரே வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 8

"அரச அதிபர் ஊடாக அனுப்பிய மகஜர் ஜனாதிபதியைச் சென்றடையவில்லை" என்ற தலைப்பில் நேற்றுக் காலை உதயனில் செய்தி வெளியாகியதை அடுத்து —

யாழ். அரச அதிபர் திரு. க பொன்னம்பலம் நேற்றுக் காலை அது தொடர்பாக யாழ். செயலக தொலைபேசி மூலம் அவசர அவசரமாக ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டார்.

நேற்றுக் காலை 10-30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற — கல்லூரி நூற்றாண்டு விழாமலர் வெளியீடு — நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். அரச அதிபரே இத்தகவலை வெளியிட்டார்

அங்கு உரையாற்றியபோது "உதயன்" பத்திரிகையின் பெயர் குறிப்பிடாமல், அரச அதிபர் கூறியதாவது:-

[illegible] வியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் மகஜர் சம்பந்தமாக பத்திரிகை ஒன்றின் முற்பக்கத்தில் வெளியான தவறான செய்தியால் மாணவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது அச்செய்தி முற்றிலும் தவறானது.

இது குறித்து ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டதாலும் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்ததாலும் இன்று இங்கு வர தாமதமாகிவிட்டது

ஜனாதிபதி செயலகத்துக்கு தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினேன். இன்று செய்தி வெளியானது போல முன்பக்கத்தில் சரியான செய்தியை வெளியிட்டு அதன் விவரத்தை அங்கு உடன் அனுப்பி வைக்கும்படி ஜனாதிபதி செயலகம் பணித்துள்ளது.

இந்தச் செய்தி மாணவர்களுக்கும் கல்வி சம்பந்தப்பட்டவர்களுக்கும் ஒருவெறுப்பை ஊட்டியிருக்கலாம். இதை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த விடயம் தொடர்பான அறிக்கை இன்று அனுப்பி வைக்கப்படும்

மாணவர்கள் மத்தியில் நீதியை நிலைநாட்ட வேண்டியது அரச அதிகாரிகள் பொறுப்பு. இன்றைய பத்திரிகையில் வெளிவந்தது தவறு.

சம்பந்தப்பட்ட மகஜர் உடனடியாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது.

நிலைமையைத் தெளிவுபடுத்துவது பற்றிய அறிக்கை தயாரிப்பது குறித்து மூத்த அதிகாரிகளான திரு குணராசா திரு வைத்திலிங்கம் ஆகியோருடனும் கலந்தாலோசித்தேன்.

அறிக்கை இன்று அனுப்பப்படும்.

— இவ்வாறு சாரப்பட அரச அதிபர் அங்கு கூறினார்.

தமது உரையை முடித்துக் கொண்டு, மேடையில் உள்ள தமது ஆசனத்துக்கு அமர வந்த அரச அதிபர், தமது கைகளில் இருந்த — ஒரு கடிதத்தின் பல போட்டோ பிரதிகளை — அருகில் இருந்தவர்களிடம் விநியோகித்தார். அவை மேடையில் இருந்த அனைவரிடமும் பின்னர் விநியோகிக்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்துக்கு வழக்கமாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டால், அது கிடைத்தது குறித்து ஜனாதிபதியின் செயலகம் கடிதம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேராதனையில் 11 மாணவர் இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 8

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற "ராக்கிங்" தொடர்பாக 11 மாணவர்கள் தமது கல்வியை தொடர முடியாதவாறு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## நரோமாவில் தபால்

யாழ்ப்பாணம், ஏப். 8

எதிர்வரும் 12 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து புறப்படும் 'நரோமா' கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் எடுத்து வரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'நரோமா' கப்பல் பருத்தித்துறையில் இருந்து புறப்படும் போதும் இங்கிருந்து தபால் பொதிகள் இக்கப்பலில் அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இறக்குமதி செய்யப்பட்ட 'B' வெங்காய விதை விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல. 251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36088]

அடை வைக்க கூடிய நல்லின கோழி முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36095]

Golden Commerts Point of Layers விற்பனைக்கு உண்டு. பாலா, இல. 18, நக்கா றோட், யாழ்ப்பாணம். [36063]

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுகந்தினி, மதுபானசாலை, பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கட், அல்லியங்காடு [36111]

பூசி நீக்கப்பட்ட கறுப்பு, பிறவுண், சாம்பல், வெள்ளை நிறம் கலந்த பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: றோசாத் தோட்டம், தலங்காவல் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி கிழக்கு. [36101]

**கோழிக்குஞ்சு விற்பனை**

செஹறா பாம் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், கோல்டன் கோமத் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு சிந்து பல்பொருள் விற்பனை நிலையம், திருநெல்வேலிச் சந்தி. [36039]

Prima Broiler கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு சனிக்கிழமையும் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [36094]

**பயிற்சி வகுப்புக்கள்**

கேக் அலங்காரம், வெல்ல மலர் அலங்காரம், மேலைத்தேய ஐசிங் வகைகள், சமையற் பாகங்கள், பூ செய்தல், பின்னல் வேலைகள் தலை அலங்காரமும் ஒப்பனை முறைகளும். ஆரம்பம்: 9-4 95 காலம் 4—6 கிழமைகள். திருமதி யோகினி சண்முகநாதனிடம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் [illegible] கிருஷ்ணபிள்ளை, பொன்மொழி பாரகம், வதிரி கரவெட்டி. [சி-907]

கேக ஐசிங் மாசசினி அலங்காரம், சமையற்கலையும், உடை தயாரித்தலும், பூ அலங்காரமும், பணப்பெண் அலங்காரமும், Stocking Net, Facial ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன தொடர்பு: அனித்தா பயிற்சி நிலையம், பூநாறிமரத்தடி, கே.கே.எஸ். வீதி. கொக்குவில். [36105]

**மணமகள் தேவை**

யாழ். இந்து படித்த அழகான செவ்வாய் குற்றமற்ற அச்சுவினி நட்சத்திர 28வயது, சுவாதி நட்சத்திர 24 வயது பெண்களுக்கு படித்த அரசாங்க, வங்கி உத்தியோகத்தரும், விரிவுரையாளர்களும் சொந்த வியாபாரம் செய்வோரும் விரும்பத்தக்கது. சாதகத்துடன் தொடர்பு கொள்க. இல: 970, உதயன் மே/பா. [8471]

**மணப்பெண் தேவை**

வயது 30, நட்சத்திரம் மகம், செவ்வாய் குற்றமற்ற நோர்வேயில் மொழிபெயர்ப்பாளராக தொழில் புரியும் கௌரவமான குடும்ப மணமகனுக்கு A/L சித்தி அடைந்த அழகிய மணப்பெண் தேவை. யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்து அழைத்துச் செல்லலாம் தொடர்பு: M. Rajenthieram, (Retd Accountant) இல 165 கோப்பாய் தெற்கு (நாவலர் பாடசாலை அருகில்), கோப்பாய். (36083)

**ஆசிரியர் தேவை**

யமுனா பத்தியில் விடுவந்து A/L 1995 மாணவனுக்கு தாவரஇயல் விலங்கியல் பாடம் சொல்லிக்கொடுக்க ஆசிரியர் வேண்டும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும் இல: 777, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [36108]

**காணி விற்பனைக்கு**

உரும்பராய் தெற்கு பலாலி வீதியின் மேற்கே ''ஹரிஓம்'' வீட்டின் பின்புறம் ஒழுங்கை வசதியுடன் களஞ்சியப்பாவனைக்கான கட்டிடத்துடன் 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-917]

**தவறிவிட்டது**

3-4-95 எனது மூக்குக் கண்ணாடி மிருசுவில் அரசாங்க டிஸ்பென்சரிக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டு எடுப்பவர்கள் G. சிறீகரன், வேவில் கந்தசாமி கோயிலடி, கொடிகாமம் என்னும் விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [36093]

## சுவாமி விவேகானந்தர் விழா

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் நடத்தும் சுவாமி விவேகானந்தர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நிறுவனப் பணிப்பாளர் திரு. இ. ராஜா மகேந்திரசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி சி இராமநாதன், வட இலங்கை சர்வோதயத் தலைவர் திரு. க. திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்து கொள்வர்.

மாணவிகளின் நடன அரங்கமும் விழாவில் இடம்பெறும்.

## ஒப்பந்தம் கோரல்

சைவ வித்தியாவிருத்திச் சங்கம், திருநெல்வேலி.

வேலை விபரம்:

### கிணறு தோண்டலும் கட்டடம் அமைத்தலும்

ஒப்பந்தகாரர்கள் ஆகக் குறைந்தது 500 000/- மேற்பட்ட வேலைகள் செய்வதற்குப் பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேலைகளும் அதன் தன்மைகளும்

1. 9 அடி விட்டமுள்ள கிணறு 4½ அடி ஆழமான நீர் காணப்படும் வரை தோண்டப்படல் வேண்டும்.
2. மண்கண்டத்திற்கு ஒரு அடிக்குரிய கூலி
3. கல்லுக் கண்டத்திற்கு ஒரு அடிக்குரிய கூலி
4. கல்லுக் கண்டத்திற்கு மேல் உள்ள பகுதி கட்டு வேலை ஒரு அடிக்குரிய கூலி
5. கிணற்றின் இரண்டு பக்கத்திற்கும் 9 அடிக்கு தூண் கட்டுவதற்குரிய கூலி
6. இரு தூண்களுக்குமிடையே குறுக்குக் கேடர் அமைத்தலும் அதற்குரிய கப்பி அமைத்தலும் ஆகியவற்றுக்குரிய கூலியும் செலவும்
7. கிணற்றின் மேற்பகுதிக்கு தொப்பிக் கட்டு கட்டுவதற்கு நீர்த்தொட்டி, துரவு ஆகியவை அமைத்தலுக்குரிய கூலி

நிபந்தனைகள்

1. கட்டடப் பொருள்கள் யாவும் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
2. வெடிமருந்து பயன்படுத்தக் கூடாது.
3. வேலை தொடங்கும் முன் மீளப்பெறக் கூடிய வைப்புப் பணமாக சங்கத்திற்கு ரூபா 10,000/- செலுத்தப்படல் வேண்டும்.
4. கொடுப்பனவுகள் யாவும் மூன்று பிரிவுகளாக வழங்கப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் உரிய கொடுப்பனவின் 40% வழங்கப்படும் மிகுதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வழங்கப்படும்.
5. வேலைகள் யாவும் 30 – 06 – 1995 க்கு முன்னர் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

ஒப்பந்தகாரர்கள் தங்கள் ஒப்பந்தக் கோரிக்கைகளை 22 – 04 – 1995 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கிணறு தோண்டலும் கட்டடம் அமைத்தலும்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மீளப்பெற முடியாத கேள்விக் கட்டணமாக ரூபா 250/- க்கு காசோலை அல்லது மணிஓடர் ''தலைவர், சைவ வித்தியாவிருத்திச் சங்கம்'' என்ற பெயரில் அனுப்பப்படல் வேண்டும்.

செயலாளர்,
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[சி-918]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 11 — 1926



மறைவு: 09 — 03 — 1995

அமரர்
**தாமோதரம்பிள்ளை சிவபாகசுந்தரம்**
(இளைப்பாறிய கிராம சேவையாளர்)
கந்தர்மடம்

பாசமுடன் எங்களுடன் வாழ்ந்த நீங்கள்
பாதியிலே எமைவிட்டுப் பிரிந்ததேனோ?
ஆசையுடன் உங்கள் முகம்பார்ப்பதற்கு
அழுதழுது ஆவலுடன் ஏங்குகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி மகன்,
மருமக்கள், பெறாமக்கள்.

93/2 இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்.

(சி/894)

சித்திரைப் புத்தாண்டு] தினத்தை முன்னிட்டு

**யாழ் காலணி விற்பனை நிலையம்**
வழங்கும்

## புதுவருட மலிவு விற்பனை

தெரிவிற்கும், மலிவிற்கும்
சிறுவர் முதல் - முதியோர் வரை
BATA காலணிகளை நவீன டிசைன்களில் தெரிவு செய்ய

இன்றே நாடுங்கள்:

**யாழ் காலணி விற்பனை நிலையம்**
[YARL TRADE CENTER]
**AGENTS FOR BATA,**
11, ஆஸ்பத்திரி வீதி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

(36113)

கொழும்புத்துறை மேற்கு
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்
ஆண்டு விழாவை முன்னிட்டு
நடத்தப்படும்

## மாபெரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் ரூபா 50/- செலுத்தி விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: **12 — 04 — 1995**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.
53, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.

ஆதரவு நல்குவோர்:
கமலேஸ்வரி — கமலேஸ்வரி
களஞ்சியம், விற்பனை நிலையம்,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[36097]

அமரர்
**உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா**
[இளைப்பாறிய அதிபர், மெமோறியல் பாடசாலை]
அவர்களின் வாழ்விற்கு

## நன்றி செலுத்தும் வழிபாடு

நாளை (9-04-95) ஞாயிறு மாலை 4 மணிக்கு
நவாலி தென்இந்தியத் திருச்சபையில்
நடைபெறும்
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்


திருமதி K. அன்னப்பா

மருத்துவமனை சாலை,
மானிப்பாய.

[8473]

## மோக்ஷ தீப அஞ்சலி

"நாம் குடியிருந்த கோயில்"



உரும்பிராய் மேற்கு

**திருமதி அருணாசலம் இரத்தினம்**

மலர்வு: 02 — 03 — 1905
உதிர்வு: 24 — 03 — 1995

எங்கள் அருமைத்தாயாரின் மோக்ஷதீபக் கிரியைகள் இன்று (08 - 04 - 1995) சனிக்கிழமை முற்பகல் ஆரம்பமாகி நடைபெற உள்ளன.

கிரியைகளை அடுத்து பண்டிதமணி அவர்கள் எழுதிய ''சைவநற்சிந்தனைகள்'' நூலின் அறிமுகவிழாவும் மோக்ஷதீபம் ஏற்றுதலும், மதியபோசனமும் இடம் பெறவுள்ளன.

குறித்த வைபவங்களிற் பங்குபற்றும் வண்ணம் பெரியோர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
அ. அளைலிங்கம் [பூசகர், கொழும்புத்துறை]
[illegible] [... உத்தியோகத்தர்]
உரும்பிராய் மேற்கு,
[illegible]

[36117]

பட்டம் பெற்ற டாக்டர்கள்

## உள்ளகப் பயிற்சிக்காக நீண்டகாலம் காத்திருப்பு

கொழும்பு, ஏப். 8

மருத்துவ மாணிப்பட்டம் பெற்று வெளியேறும் வைத்திய மாணவர்கள் உள்ளகப் பயிற்சி பெறுவதற்கான கால இடைவெளியை குறைக்குமாறு கொழும்பு மருத்துவ பீடமாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இந்தமாத இறுதியில் பல்கலைக்கழக கல்வியை முடித்து பட்டம்பெற்று வெளியேறும் வைத்திய மாணவர்கள் உள்ளகப் பயிற்சிக்கு நியமனம் பெறுவதற்காக அடுத்த வருடம் ஏப்பிரல் வரை காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது

1987—1989 ஆண்டு காலப் பகுதியில் தென்னிலங்கை பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டமையால் ஏற்பட்ட காலதாமதத்தை நிவர்த்தி செய்யும் வகையில் பாடங்களை தாம் கஷ்டங்களின்மத்தியில்பூர்த்தி செய்திருந்ததாகவும்—

தற்போது உள்ளக பயிற்சி தொடர்பாக மீண்டும் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வருடா வருடம் அதிகரித்துச் செல்லும் இந்த கால இடைவெளியை நோக்கும்போது 2006 ஆண்டில் வெளியேறும் மாணவர்கள், 3வருடங்கள் வரை உள்ளகப் பயிற்சிக்காக காத்திருக்க வேண்டி ஏற்படும் என்று கொழும்பு மருத்துவபீட மாணவர்கள் கணிப்பீடுகள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஜ-14)

## எம்பிலிப்பிட்டிய சம்பவம் பற்றி விசாரணை

கொழும்பு, ஏப். 8

எம்பிலிப்பிட்டியப் பகுதியில் காணாமற்போன மாணவர்கள் பற்றி விசாரணை நடத்துவதற்கு காணாமல் போனவர்கள் பற்றி விசாரிப்பதற்கான ஆணைக்குழு எதிர்வரும் 17 ஆம், 19 ஆம், 20 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதிகளில் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையில் கூடவுள்ளது.

## விற்பனைக்கு

இயந்திரமற்ற
**32 அடி வள்ளம்**
(மரத்தால் செய்தது)

லிஸ்ட்டர் இயந்திரம் பூட்டககூடிய நல்ல நிலையில் உள்ள பவுண்டேசனுடன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வ. நவரத்தினம்,
இன்பருட்டி,
பருத்தித்துறை.

[36092]

தமிழ் பேசும்
கிராம சேவை அலுவலர் சங்கம்
யாழ்ப்பாணம்

## விசேட பொதுக்கூட்டம்

காலம்: 09-04-1995 ஞாயிறு காலை 10 மணி
இடம்: கோப்பாய் நாவலர் வித்தியாசாலை
உபதலைவர்: திரு, கே. தில்லையம்பலம்
விடயம்: பதவி மாற்றம் சம்பந்தமானது

★ சகல கிராம உத்தியோகத்தர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கே. தில்லையம்பலம் — உபதலைவர்
வி. ரி. கதிர்காமநாதன் — செயலாளர்

(சி-920)

## கண்ணீர் அஞ்சலி

எமது கிட்டத்தைச் சேர்ந்த
திருமதி புஸ்பலீலா பொன்னம்பலநாதன்
திருமதி புஸ்பராணி நவரத்தினம்
ஆகியோரின் தாயார்

**செ. வள்ளிப்பிள்ளை**

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
துர்க்கா இந்து இளைஞர் மன்றம்
ஐக்கிய நாணய சங்கம்
இளஞ்சித் விளையாட்டுக்கழகம்
விநாயகர் சனசமூக நிலையம்
படித்த மகளிர் திட்டம் மிருசுவில்

(36115)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

கல்யாணக்குளப் பிள்ளையார் திருவடிகளே சரணம்

**திருமதி நாகம்பிள்ளை ஆனந்தி**

பிறப்பு: 05 — 04 — 1915
இறப்பு: 09 — 03 — 1995

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கல்யாணக்குளம், படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்பிள்ளை ஆனந்தியின் அந்தியேட்டி கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் நீர்வை வடக்கிலுள்ள அன்னாரின் மகளின் இல்லத்தில் இன்று (08-04-1995) நடைபெறுகின்றன.

நண்பர்கள், உறவினர்கள் யாவரும் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டி அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்
செல்வி. நா. பரமேஸ்வரி
133, படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்,
மிருசுவில்.

(36109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். றோட்டறிக் கழகத்தின் 54 ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

## SPECIAL SUPPLEMENT FOR THE 54th ANNIVERSARY OF THE ROTARY CLUB OF JAFFNA.

08 - 04 - 1941 08 - 04 - 1995

BE A FRIEND

## அனைத்துலக றோட்டறி தலைவரின் ஆசி

சகல உறுப்பினர்களுக்கும்,
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்,
வடமாகாணம், ஸ்ரீலங்கா.

அன்புக்குரிய சக றோட்டேரியன்களுக்கும்

54 ஆண்டு காலச் சேவையையும், தோழமையையும் கொண்டாடும் உங்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்வு எய்துகிறேன்.



யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்துக்குச் சிறப்பான வரலாறு உண்டு. கடந்த 54 வருடங்களாக, றோட்டறியின் இலட்சியமான தொண்டினை மிகப் பொழிப்பாகவும், பொலிவாகவும் நீங்கள் ஆற்றியுள்ளீர்கள். மக்களுக்குப் பயன் தரத்தக்க வல்ல பல திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் நீங்கள் செயற்படுகிறீர்கள்; அது வளமான எதிர்கால வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமையும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

சேவையை மரபுச் சொத்தாக நீங்கள் தொடரும் வேளையில், வசதி இல்லாதவர்களின் நண்பனாக இருக்குமாறும் உங்கள் சமூகத்தின் வாழ்வுக்கும் பலத்துக்கும் உறுதுணையாக ஒன்றிணைந்து தொண்டாற்றுமாறும் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன்.

இன்பகரமான இவ்வேளையில் எனது மனமுவந்த ஆசிகளைத் தெரிவிக்கிறேன்.

பில் ஹன்ட்லி, தலைவர்,
அனைத்துலக றோட்டறி.

## ஆதீன முதல்வர் ஆசிச் செய்தி

மெய்யன்பர்களே!

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் தனது 54 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி.

வாழ்க்கையில் நலிந்தவர்களுக்கு உதவுவது இறைவனுக்குச் செய்யும் பூசைக்குச் சமமாகும். அதனாலேயே மக்கள் சேவையே மகேசன் சேவை என்று எங்கள் சமயத்து அனுபூதிமான்கள் போதித்தார்கள். அவ்வாறே தமது வாழ்க்கையில் கடைப்பிடித்தும் காட்டினார்கள்.

பணிபுரி பலனை எதிர்பாராதே என்ற கோட்பாட்டுடன் இயங்கும் தொண்டு நிறுவனங்களில் றோட்டறிக் கழகமும் அடங்கும். யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் எமது மக்கள் அடைந்துள்ள இன்றைய பாதிப்பான நிலையை உணர்ந்து, காலத்தால் செய்த உதவியாக பல அரிய சேவைகளைச் செய்து வருகிறது.

பிறருக்கு உதவும் இந்தப் பெரும் தொண்டு மேன்மேலும் விரிந்து, வியாபித்து சமூக வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் றோட்டறிக் கழகத்தின் சேவை செழித்தோங்க ஆசி கூறுகிறேன்.

மக்கள் சேவை செய்வதற்கு எல்லோரும் முன் நின்று உழைப்பராக றோட்டறிக் கழகத்தை புதிய உத்வேகத்துடன் வழி நடத்திச் செல்லும் தலைவருக்கும், உறுப்பினருக்கும் நல்வாசிகள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை ஆதீனமுதல்வர்

## எல்லைகளைக் கடந்த சேவை

யாழ் றோட்டறிக் கழகத்தின் 54 ஆம் ஆண்டு பூர்த்தி குறித்து எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

''வளம் நிறைந்த மக்களுக்கு மேன்மேலும் வசதிகளைப் பெருக்குவதிலும் பார்க்க, வசதியற்றவர்களுக்கு தேவையானவற்றை வழங்குவதிலேயே எமது முன்னேற்றம் சோதிக்கப்படுகிறது''



கடந்த 54 ஆண்டுகளாக யாழ். றோட்டறிக் கழகம் மக்களுக்கு, தொடர்ந்து ஆற்றி வரும் அளப்பரிய சேவையை சொற்களில் வடிக்க முடியாது.

உங்களது தலைவர் 'சரா'வின் மிகச் சிறந்த தலைமை, சகல எல்லைகளையும் கடந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு உங்களது நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு பங்காளியாகப் பணியாற்றவும், பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ். றோட்டேரியன்களுடன் நட்புப் பாலத்தைக் கட்டியெழுப்பவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெரு மகிழ்வு எய்துகிறேன்.

''மரத்தின் மூலவேர் உறுதியாக இருக்கும் வரை, கிளைகள் காற்றுக்கு அசைவதையிட்டு கிலேசமடைய தேவையில்லை''

நீங்களும் உங்களது அங்கத்தவர்களும் இந்த சிறப்பான றோட்டறி ஆண்டில் ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்கு எனது பாராட்டுக்கள்.

''எத்தனைபேர் பணியில் ஈடுபடுகிறார்கள் அல்லது சேவையை வழங்குகின்றார்கள் என்பது முக்கியமல்ல; எத்தனை பேர், அவரவர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதே முக்கியமாகும்.''

நண்பர்களே, நீங்கள் தொடர்ந்து உங்கள் எல்லைக்கு அப்பால் பார்வையைச் செலுத்துங்கள்; எதைச் செய்கிறீர்களோ அதில் நம்பிக்கை வையுங்கள்; எதை நம்புகிறீர்களோ அதைச் செய்யுங்கள். இந்த அடிப்படையில் மற்றவர்களுக்கு உதவும் போது நீங்கள் உண்மையான மன நிறைவை அடைவீர்கள்.

சுரேஷ் எம். மெல்வானி
மாவட்ட ஆளுநர் 1993/1994

## கழகத் தலைவரிடமிருந்து

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் 54ஆவது வருட நிறைவினை, நான் தலைவராகப் பதவி வகிக்கும் இந்த நடப்பு ஆண்டில் கொண்டாடுவது எனக்கு மிகுந்த மனக்குளிர்வைத் தருகிறது.



அனைத்துலகச் சேவைக்கழகத்தின் மகத்துவமான இலட்சியங்களால் உணர்வூட்டப்பட்ட நாம், எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஏராளமான நலன்புரித் திட்டங்களைச் செயற்படுத்த முடிந்தமை குறித்து மகிழ்வெய்துகிறோம்.

எமது மக்கள் எண்ணிறைந்த கஷ்டங்களை எதிர்நோக்கும் காலம் இது. அவர்களின் இன்னல்களை நீக்கும் விதத்திலும், இவ்வேளையிலும் தாம் விரும்புவதை அனுபவித்து, மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று அவர்கள் மனநம்பிக்கை கொள்ளும் வகையிலும் எங்கள் சேவைத் திட்டங்கள் அமைந்தன என்பதில் நாம் திருப்தி கொள்கிறோம்,

எமது கழகம் தனது 54ஆண்டு கால வரலாற்றில், சகல துறைகளிலும் தனது சேவையை மிகச் சிறப்புற ஆற்றியுள்ளது என்று கூறுவதில் இறும்பூதெய்துகிறேன். எங்கள் சமூகத்தினரின் வாழ்க்கையை மேம்படுத்தும் பொருட்டு எமது கழக உறுப்பினர்கள் எல்லோரும், தங்கள் நேரத்தையும், ஆற்றலையும் அர்ப்பணித்து தங்களது நிறைவான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கினார்கள்.

மக்களின் நல்வாழ்வுக்கும், சமூக செழிப்புக்குமாக நாம் வகுத்த செயல்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் அவர்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும் முழுப்பங்கினதாகும்.

எதிர்வரும் ஆண்டுகளிலும் எத்தகைய சூழ்நிலையிலும் எங்கள் மக்களுக்கு எமது சிறப்பான சேவையைத் தொடர்ந்து நல்குவோம் என்று இத்தருணத்தில் திடசங்கற்பம் செய்கின்றோம்.

PHF ச. சரவணபவன்,
தலைவர், (1994/95),
யாழ் றோட்டறிக்கழகம்.



றோட்டரியின் தந்தை
போல் பி. ஹரீஸ்

## யாழ். றோட்டறிக் கழகத்தின் சேவையில் பங்காளிகளான சேய்க் கழகங்கள்

### இன்ரறக்ற் கழகங்கள்

1. புனிதயோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
2. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
3. புனிதபத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
4. வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்.
5. கனகரத்தினம மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
6. கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.
7. திருக்குடும்பக் கன்னியர்மடம் யாழ்ப்பாணம்.
8. மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
9. யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
10. உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்.
11. யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
12. யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
13. மானிப்பாய் இந்து கல்லூரி, மானிப்பாய்.
14. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மானிப்பாய்.
15. உரும்பிராய் இந்துக்கல்லூரி, உரும்பிராய்.
16. ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
17. வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
18. யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
19. மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மானிப்பாய்
20. சாவச்சேரி இந்துக் கல்லூரி, சாவச்சேரி.
21. இரமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
22. நவீல்ட் பாடசாலை, கைதடி
23. வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்
24. ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்
25. யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுகோட்டை

### றோட்டறக்ற் கழகங்கள்

1. யாழ்ப்பாணம் றோட்டறக்ற் கழகம்
2. யாழ்ப்பாணம் மிட்ரவுண்றோட்டறக்ற் கழகம்
3. வடமராட்சி றோட்டக் கழகம்
4. சுன்னாகம் றோட்டறக்ற் கழகம்

## செஞ்சிலுவை பிரதிநிதி ஆசி

யாழ். றோட்டறிக் கழகத்தின் 54ஆவது ஆண்டு நிறைவையொட்டி அதன் தலைவருக்கும் அங்கத்தவர்களுக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் றோட்டறிக் கழகத்தை உருவாக்கிய போல் ஹரிஸ் மனிதாபிமானத்தை தீர்க்கதரிசனத்துடன் நோக்கினார். அன்று அவர் காட்டிய வழி இன்று உலகம் முழுவதும் உள்ள றோட்டறிக் கழக உறுப்பினர்களை நிச்சயமாக வழிநடத்திச் செல்லும்.

கடந்த 54 வருட காலமாக யாழ். றோட்டறிக் கழகம் வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளது றோட்டறிக்கழகத்தின் ஸ்தாபகரின் கனவுகளை நனவாக்கும் நற்பணிகளை அது மேற்கொண்டு வருகிறது.

யாழ். றோட்டறிக் கழகம் மேலும் பல்லாண்டு மனித வர்க்கத்துக்கு நற் சேவையாற்ற வேண்டும் என்று கூறி றோட்டறிக் கழகத் தலைவரையும் அதன் உறுப்பினர்களையும் வாழ்த்துகிறேன்.

செல்வி மேரி பேர்கின்ஸ்,
யாழ். [illegible],
செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு

(மலர் தொடர்ச்சி 4 ஆம் பக்கத்தில்)

## மாவட்ட ஆளுநரின் ஆசிச் செய்தி

யாழ். றோட்டறிக் கழகத்தின் 54ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இந்த ஆசிச் செய்தியை அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



யாழ் றோட்டறிக் கழகமானது, கடந்த காலங்களில் றோட்டறிச் செயற்பாடுகளில் எப்போதும் முன்னணியில் இயங்கி வந்துள்ளதுடன், மாவட்டத்திற்கு ஊக்கமளிக்கும் சக்தியாகவும் விளங்கியது. இடர் நிறைந்த காலங்களிலும், தொடர்புகள் மட்டுப்பட்டிருந்த போதிலும், யாழ். றோட்டறிக் கழகம், மாவட்டத்துடன் மிகச் சிறந்த உறவைக் கொண்டிருந்தது.

குறிப்பாக, எனது பணிக்காலத்தின்போது, உங்கள் தலைவரிடம் இருந்தும், அங்கத்தவர்களிடம் இருந்தும் ஒழுங்காக அறிக்கைகளைப் பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இது, உங்கள் றோட்டறிச் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் சீராக அறிந்து கொள்ள எனக்கு உதவியது.

யாழ். றோட்டறிக் கழகம் எதிர்காலத்திலும் அனைத்து வெற்றிகளைப் பெற இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

றோட்டறி என்பது நண்பனாக இருப்பது என்ற இலட்சியத்திற்கு அமைவாக தலைவர் சரவணபவனும் அவரது பணிப்பாளர் சபையும் சமூகத்தின் மீது கரிசனை கொண்டு, மிகச் சிறந்த முறையில் ஆற்றிய அளப்பரிய தொண்டுகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

றோட்டேரியன் மெல்வில் அசௌவ்,
மாவட்ட ஆளுநர்,
சர்வதேச றோட்டறி மாவட்டம் 3220, இலங்கை.

## யாழ். ஆயரின் ஆசிச்செய்தி

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு யாழ். றோட்டறிக் கழகத்தின் உருவாக்கமும் செயற்பாடும் ஓர் நல்ல உதாரணம் என்று சொன்னால் மிகையாகாது. இக் கழகம் தனது ஐம்பத்து நான்காம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றபோது இதில் அங்கம் வகித்து ஆர்வமுடன் பணியாற்றிவரும் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

அதேவேளை ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் இக் கழகம் புதுப் பொலிவு பெற்று இன்னும் அனேக அங்கத்தவர்களை அரவணைக்கவும், இக் கழகத்தின் அரவணைப்பால் ஆறுதல் அடைபவர்களின் வட்டம் பன்மடங்கு விரிவடையவும் வாழ்த்திநிற்கின்றேன்

அதி. வண தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்.

## பெருமை மிக்க நீண்ட வரலாறு

யாழ் றோட்டறிக் கழகத்தின் 54ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.



உங்களது கழகம் பெருமை மிக்க நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பினும், அந்த நீண்ட வரலாற்றுக்கு மேலாக, கடந்த தசாப்தத்தில் உங்களது கழகம் ஆற்றியுள்ள பணிகள் மறக்க முடியாத வரலாற்றுக் குறிப்புகளாக அமைந்துள்ளன. நாட்டின் கொந்தளிப்பான நிலையின் மத்தியிலும், நட்புறவு மற்றும் சேவைகள் ஆகியவற்றை, அவற்றின் புனிதத் தன்மையுடன் ஆற்ற இயலும் என்பதனை நீங்கள் றோட்டறி உலகத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளீர்கள்.

நடப்பு ஆண்டில் தலைவர் திரு. சரவணபவனின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ், நீங்கள், சேவையில் புத்தம் புதிய வழிமுறைகளைக் கண்டு பிடித்து வெளிப்படுத்தி உள்ளதுடன், கழகத்தை எப்போதுமில்லாத மிக உயர்ந்த, உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளீர்கள்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இருண்ட போர் வேளையில், பிரித்தானிய மக்கள் காட்டிய துணிவையும், எதையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றலையும் கண்டு வின்சன்ற் சேர்ச்சில், அக் காலத்தை ''பொன்னான நாட்கள்'' என்று கூறியது போலவே, தங்கள் கழகத்தின் எதிர்கால கழக அங்கத்தவர்களும், உங்களது தற்போதைய பணிகளைப் பின் நோக்கிப் பார்த்து, அதை தங்களது கழகத்தின் ''பொன்னான நாட்கள்'' எனக் கூறுவர்.

உங்களது அனைத்து எதிர்கால முயற்சிகளும் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.

ரஞ்சித் சமரசிங்க,
மாவட்ட ஆளுநர் 1995/96.

## வேரூன்றி விருட்சமாகிவிட்ட மரம்

இந்த ஆண்டு றோட்டறிக்கு முக்கியமான ஆண்டு. றோட்டறி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 90ஆண்டுகள் நிறைவை அடைந்துள்ள இவ் வேளையில் யாழ் மண்ணின் றோட்டறிக் கழகம் 54ஆண்டுகளாக வேரூன்றி விருட்சமாகி விட்ட இவ் வேளையில் இச் சிறப்பு மலர் வெளிவருவது முற்றிலும் பொருத்தமானதும் பெருமைக்குரியதுமாகும்.

றோட்டறியின் பிரதான அங்கம் றோட்டறி இதயமே ஆகும். சர்வதேச புரிந்துணர்வை ஏற்படுத்துவதிலும், உலக சமாதானத்திற்காக இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களை நல்லெண்ணத் தூதுவர்களாக வேறு நாடுகளுக்கு அனுப்பி ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் றோட்டறி கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கிறது.

மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் இருக்கின்ற தலைமைத்துவ வளத்தை அவர்கள் தக்கபடி பிரயோகிப்பதற்கு எமது ஆதரவில் செயற்படும் 25 இன்ரக் கழகங்களும் 4 றோட்டறக்ட் கழகங்களும் சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

எமது மண்ணில் 90 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் எமது கழகம் இம்மண்ணிற்கு உரிய பணி ஆற்றி இருக்கின்றது.

54 வது ஆண்டு நிறைவு தினத்திலே எமது கழகத்தின் முன்னாள் தலைவர்களையும், இயக்குநர்களையும் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

றோட்டேரியன் தி. திருநந்தகுமார்,
செயலாளர்,
யாழ். றோட்டறிக் கழகம்.

## அர்ப்பணிப்புடன் கூடிய சேவை

யாழ் மாவட்டத்தில் மனிதநேயச் சேவையை வழங்கிவரும் எமது கழகத்தின் செயற்பாடுகள் யாவரும் அறிந்ததே.



54 ஆண்டுகள் இம் மண்ணில், மண்ணின் தேவைக்கேற்ற முறையில் ''தன்னலமற்ற சேவை''யை வழங்கி இன்று 55ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற கழகத்தின் அங்குரார்ப்பண தினம் நிச்சயம் நினைவு கூரப்படத்தக்கதே.

கடந்த 10ஆண்டுகளில் பல்வேறு சோதனைகளுக்கும் முகம் கொடுத்து எமது கழகம் ஆற்றிய பணிகள் குறிப்பிட்டுக் கூறப்படத்தக்கவை. இவ் வருடம் தலைவர் சரவணபவனின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ் எமது கழகம் பல்வேறு பரிமாணங்களைத் தொட்டு நின்றமைக்கு எமது அங்கத்தவர்களும், றோட்டறக்ட், இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையே காரணமாகும். இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட சேவையின் தேவையை நாமனைவரும் உணர்ந்து செயற்பட்டு, எதிர்வரும் ஆண்டுகளிலும் எமது பிரதேசத்தின் உயர்வுக்குப் பாடுபடவேண்டும் என அனைத்து தரப்பினரிடமும் வேண்டுகிறேன்.

Rtn. க. குமாரதாசன்
கழகச் சேவை இயக்குநர் 1994/95
யாழ். றோட்டறிக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ..க் கோர்ப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றுக்குப் புத்தக வேலைகள் மற்றும் யொப் வேலைகள் செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த அச்சுக் கோர்ப்பாளர் தேவை.

கடித மூலம் தொடர்பு கொள்ளவும்:
இல: 778
C/o உதயன்
யாழ்ப்பாணம்.

[36119]



## முக்கிய அறிவித்தல்

### விடுமுறை

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களும் எதிர்வரும் 09 - 04 - 95 (ஞாயிறு) அன்று சகல வகுப்புக்களையும் நிறுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மருத்துவக் கண்காட்சியில் மாணவர்கள் கலந்து பயன்பெற ஆவன செய்யுமாறு பொது நிருவாகசபை முடிவு செய்ததை அறியத்தருகின்றேன்

பொதுச்செயலாளர்
யாழ். மாவட்டம்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.

[கி- 926]


## மூச்சிருக்கும், சாகாதே!



இந்தப் படத்துக்கு இருபத்தைந்தாண்டு அகவை
முந்தநாள் போல உந்தன் முகம்மலர்ந்து-
தோன்றுதையா!
பம்பலப் பிட்டியிலே பக்கத்தில் நீயிருந்தாய்.
தம்பி, தமையன், தகப்பன் என நின்று, என்
பா நூலைப் பல்லோர் அவையில்-சரசுவதி
மண்டபத்தில் மிக்க மதிப்பாய் வெளியிட்டாய்.
''பாவலவன்'' என்கின்ற பட்டத்தை நான் தரிக்க
நீ வலுவாய்த் தான் உழைத்தாய்! நேற்றிருந்தாய்-
இன்றிலையே!
''கண்டறியாதது'' என்ற காவியத்தைத் தந்தவனே,
கண்டும் அறியாத காலன்தன் வேலையினால்
காலம் பெறநீயும் கண்மூடி விட்டாயே!
ஞாலம் பெறும் உந்தன் நற்பணியை நாம் -
மறவோம்
பொழுது கறுக்க முதல் போய் மறைந்த சூரியனே!
அழுது சிவந்தையா அன்பர்களின் கண்கள் எலாம்
சந்தப்பா வண்ணன் இல்லை ஆனாலும் உன்னுடைய
சொந்தப்பா நம்மூருச் சொத்து! வடிவேலு!
ஆச்சிமுத்து, தந்தையா அக்கை தங்கை -
வாய்மொழியில்
பேச்சினிக்கும் உன்றன் பெரிய கருத்துகளின்
மூச்சினிக்கும்! மூச்சு இருக்கும்! சாகாதே -
என் பிரியா!

-சத்தியசீலன்

(36112)


## ஓராண்டு நிறைவு
# நினைவஞ்சலி

மலர்வு: 14 — 10 — 1918



உதிர்வு: 20 — 03 — 1994

### அமரர் நாகமுத்து அரியகுட்டி

திதி: 08-04-1995

பண்பின் சிகரமாய்
பாசத்தின் புகலிடமாய்
அன்பின் உலகமாய்
அரவணைத்த எம் தெய்வமே ஐயா
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறாது எம் இதயம்
உங்கள் அன்பு முகம்
எதிரே வர
ஏங்குகின்றோம் வாரீரோ ஐயா.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

(8316)


# யாழ். றோட்டறிக் கழகத்தின் சிறப்பிதழ் தொடர்ச்சி....

## லயன்ஸ் தலைவரின் ஆசிச் செய்தி

மக்கள் சேவையில் 54 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள யாழ். றோட்டறிக் கழகத்திற்கு, வடமாகாணத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பொதுச் சேவையில் தங்களை அர்ப்பணித்துக் கொள்பவர்கள் அரிதாகிக் கொண்டுவரும் இக்கால கட்டத்தில் 54 வருடங்களை ஒரு சேவைக் கழகம் பூர்த்தி செய்வது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். றோட்டேறியன் சரவணபவன் அவர்களின் தலைமை யாழ். றோட்டறிக் கழகத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்திருக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது சரவணபவன் அர்களின் தலைமையில் கடந்த வருடம் இக்கழகம் சுகாதாரம், கல்வி, இளைஞர்களை வழிநடத்தல் போன்ற பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பலசேவைகளைச் செய்து மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

கடந்த 54 வருடங்களாக மக்கள் மத்தியில் யாழ். றோட்டறிக் கழகம் செய்த சேவைகளைப் பாராட்டுவதோடு, இன்னும் பல்லாண்டு காலம் தொடர்ந்து சேவை செய்ய எல்லா வளங்களும் கிடைக்க வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப் புழி''

—திருக்குறள்—

லயன். சே. இராசேஸ்வரன்,
பிராந்தியத் தலைவர்,
பிராந்தியம் V 11
மாவட்டம் 306 B
சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாஜம்.

## அரை நூற்றாண்டு மக்கள் சேவை

54 வருடங்களாக வெற்றி நடைபோடும் றோட்டறிக் கழகம், இன்று 08 - 04 - 95 ஆம் திகதி தனது 54வது வயதின் பூர்த்தியைக் கொண்டாடும் பொழுது அது மக்களுக்கு ஆற்றிய தன்னலமற்ற சேவையை பாராட்டாதிருக்க முடியாது.

அரை நூற்றாண்டை பிறர் நலனுக்காக செலவு செய்த இக்கழகம், இதன் அலகுகளாக இன்ரறக், றோட்டறக், றோட்டறிகிராமியக் கழகங்களைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு முதலியவற்றில் இளைஞர்களுக்கு மட்டில்லாத பயிற்சியும், உற்சாகமும் ஊட்டி அவர்களை அத்துறையில் மட்டுமன்றி, அவர்களுக்கு மனித நேயத்தையும் வளர்த்து வந்துள்ளது என்றால் மிகையாகாது.

இக்கழகத்தினர் கண்சிகிச்சை, கண்ணாடி வழங்கல், வசதியற்ற மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல், வைத்தியசாலைகளுக்கு வர்ணம் பூசுதல், இன்னும் பல உதவிகளையும் செய்து தம்மை பொதுச் சேவைகளில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இக்கழகம் - ஆல்போல் வேரூன்றி, விழுது விட்டு நம் மக்களின் துயர் போக்க வளர வேண்டுமென்று எமது மனமார்ந்த ஆசியைக் கூறுவதுடன், எல்லாம் வல்ல ஆண்டவனின் ஆசியும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

★வாழ்க கழகம், வாழ்க அதன் சேவை★

வைத்தியகலாநிதி, த. சிங்கராஜா
தலைவர், இ. செ. சி. சங்கம்,
யாழ் கிளை.

# மாணவர்கள், பொதுமக்கள் பார்க்க வேண்டிய கண்காட்சி

## அரியசந்தர்ப்பம் என்கிறார் நந்தி

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமும். மருத்துவ பீடத்தினரும் நடத்தும் மருத்துவ-சுகாதாரக் கண்காட்சி யாழ் குடாநாட்டு மக்களுக்கு, குறிப்பாக மாணவருக்கு ஓர் அரிய வாய்ப்பாகும். எதிர்கால சந்ததியினர் சுக வாழ்விற்கும், பொது அறிவுக்கும் தெரியவேண்டிய முக்கிய விடயங்கள் கண்காட்சியில் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் முன்னாள் மருத்துவ பீடாதிபதியும், மருத்துவத் துறை பிரபல அறிஞருமான பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி).

இக்கண்காட்சியை எல்லோரும் பார்க்கவேண்டும் என்பதனை வலியுறுத்தி அவர் மேலும் தெரிவித்ததாவது;

இங்கிலாந்து போன்ற மேல் நாடுகளில் இத்தகைய கண்காட்சி நிரந்தரமாக சுகாதார ''மியூசியங்''களில் உண்டு. வேறு நாடுகளில் தொலைக்காட்சிகளில் இந்த விடயங்கள் வாராவாரம் ஆராயப்படுகின்றன. நமக்கு இது போன்ற கண்காட்சிகள் மட்டுமே அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன.

### உயிரியல் படிக்காதவருக்கும் முக்கியம்

இக்கண்காட்சி உயிரியல் மாணவருக்கு மட்டுமே உகந்தது என்ற தப்பபிப்பிராயம் உண்டு உண்மையில் உயிரியல் படிக்காத மற்றவர்களுக்கே இது அத்தியாவசியம் ஆகும். ஏனெனில் பொது அறிவு பெறுவதற்கு இது ஓரேஒரு சந்தர்ப்பம் ஆகும். ஆகவே கிடைத்த இந்த வாய்ப்பைப் பாடசாலைகள் முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

ஆறாம் ஆண்டு தொடக்கம் எல்லா மாணவரும் பார்க்க வேண்டிய கண்காட்சி இதுவாகும். ஆசிரியர்களும் இதை முற்றாகப் பயன்படுத்த வேண்டும்

இதற்காகப் பயிற்றப்பட்ட மாணவ, மாணவிகள் கண்காட்சிப் பொருள்களுக்கு விளக்கம் தருவது விசேஷமானதாகும்.

இந்த விடயங்களை ஒருவர் நூலில் படிப்பதானால், பல வருடகாலம் பல நூல்களைப் படிக்கவேண்டும். அப்படி இருந்தும் விளக்குவதற்கு ஆசிரியர் தேவைப்படும்.

பெற்றோருக்கும் இந்தக் கண்காட்சியைப் பார்ப்பது மிக்க நன்மை பயக்கும் என்றார். (அ)

# றோட்டறி ஏற்பாட்டில் கண்சத்திர சிகிச்சை முகாம்

## நாளை கோப்பாயில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப் 8

யாழ் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண் சத்திர சிகிச்சை முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது.

யாழ். றோட்டறிகழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் ஏழாவது கண் சத்திர சிகிச்சை முகாம் இதுவாகும்.

தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு அங்கு கண் சிகிச்சை நிபுணர்களால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும். (ஐ)

# வைத்தியசாலைகளுக்கான பொருள்கள் தளபாடங்கள்

## அனுப்பி வைக்க ஏற்பாடு

யாழ் சுகாதார, திணைக்களம், யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 1995 ஆம் வருடத்துக்கான பொருள்களையும், தளபாடங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.

இது தொடர்பாக யாழ் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் பணிமனை, இப் பிராந்தியத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

தேவையான பொருள்கள், தளபாடங்கள் ஆகியவற்றின் விவரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தேவையில்லாத - மேலதிகமான பொருள்கள் இருப்பின் அது பற்றிய விவரத்தையும் தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ-5-135


## PUBLIC LECTURE ON CHILD PSYCHOLOGY

Dr. Nancy Baron a specialist in Child Psychology will deliver a lecture on ''A Creative Approach to Emotional Well - Being of Children'' at the main lecture Hall at Shanthiham, 15, Kachcheri - Nallur Road, Jaffna on Sunday 09 - 04 - 1995 at 9-00 a. m.

**Those Interested are Welcome**

Dr. A. J. V. CHANDRAKANTHAN
PRESIDENT

ASSOCIATION FOR HEALTH AND COUNSELLING
Jaffna.

[C-923]


## ஆலயங்களில்

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள் மிகுகண்ணகை அம்பாள் ஆலய கிராம பிரதட்ஷண திருக் குளிர்த்தி வைபவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

கிராம பிரதட்ஷணம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (ஐ-14)

★ ★ ★

வண்ணை கோசாவில் முத்து விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. உற்சவம் 15 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் உற்சவ நாட்களில் திரு. குமாரசாமி சண்முகநாதனின் 'விநாயகர் புராணம்' தொடர் சொற்பொழிவு இடம் பெற்றுவருகிறது. (ஐ-14)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

உற்சவ நாட்களில் தினமும் இரவு 8.30மணிமுதல் 10 மணிவரை கலாவினோதன் வில்லிசைப் புலவர் திரு. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் 'தெய்வீக வரலாறுகள்' வில்லிசை நிகழ்வு இடம்பெறும். [ஐ-14]

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஏப். 8

அரியாலை சனசமூக நிலைய, பாலர் பாடசாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளன.

திரு. ந. வாமசிவன் பிரதம விருந்தினராகவும், திரு. த. சண்முகசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-5)

★ ★

யாழ்ப்பாணம், ஏப். 8

பாரதி சிறுவர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் முன்றிலில் நடைபெறும்.

பாரதி கலை மன்ற உப தலைவர் திரு. கி சிவசிதம்பரம் விழாவுக்குத் தலைமை வகிப்பார். (இ)

## கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வலயம் - 2 கல்வி கலாசார விளையாட்டு அபிவிருத்திச் சபை கலை நிகழ்ச்சி ஒன்றினை நடத்துகின்றனர்.

மேற்படி நிகழ்ச்சி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் இன்று சனிக்கிழமை காலை 9-00மணிக்கு நடை பெறும். [இ-155]

## குருபூசை நிகழ்ச்சி

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரின் குருபூசை நாளை ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணிக்கு திருநெல்வேலி அரசடி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஞானப்பிரகாச முனிவரின் சமயப்பணிகள் பற்றி உரைநிகழ்த்துவார்.


ரவி ராஜ் ஆடையகம் வழங்கும்

## மாபெரும் மலிவு விற்பனை

★ அனைத்து ஐவுளி வகைகளும்,
★ றெடிமேட் வகைகளும்

**08 - 04 - 1995** முதல்
**14 - 04 - 1995**
வரை மட்டும் நடைபெறும்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்

ரவி ராஜ் ஆடையகம்
77, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.
(சோதியாதெரு)

(சி-968)



சுன்னாகம் மங்கையின்

## மலிவு விற்பனை

புத்தாண்டை புத்தாடைகளுடன் கொண்டாட
கழிவு விலைகளில்

★ சைனா சித்தை, ★ பப்பிளின், ★ சூட்டிங்,
★ சேட்டிங், ★ இந்தியன் சாறீஸ்
வகைகளை வழங்குகின்றோம்.

# மங்கை பட்டுச்சோலை

8, சிறப்பு அங்காடி,
சுன்னாகம்.

(சி/925)



## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 08 — 1921



மறைவு: 08 — 03 — 1995

### அமரர் கதிரவேலு நமசிவாயம்

ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எம்மைப் பிரிந்து சென்றாலும் என்றென்றும் எம் உள்ளங்களில் நின்று நிலவுகின்றீர்கள்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர், உதவிகள் புரிந்தோர் ஆகியோருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கிழக்கு வளவு,
மல்லாகம்.

(36120)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## நம்பிக்கையை வளர்க்க...

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை தீவுப்பகுதிக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் பிரகாரம் அந்தந்தத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வருடாந்தம் 25 லட்சம் ரூபா ஒதுக்கப்படுவது வழக்கம். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமக்கு ஒதுக்கப்படும் நிதியை தமது பகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு வழங்கலாம். விருப்பமெனில் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பிற மாவட்ட அபிவிருத்தி வேலைக்கும் வழங்கலாம்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் பெரும் பிரதேசத்தில் தேர்தல் நடைபெறவில்லை. இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் வாழும் சில நூற்றுக்கணக்கான வாக்காளர்களை மையமாக வைத்து, பெயருக்காக ஒரு தேர்தல் நடந்தது. அப்போது நடைபெற்ற தில்லுமுல்லுகளும், மோசடிகளும் மிகப் "புகழ்" பெற்றவை. அவற்றை எடுத்துக்காட்டி, அடிப்படையாக வைத்து தேர்தல் ஆட்சேப வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது வேறு விடயம்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தீவுப்பகுதிக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதானது, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் பெரும்பாலான மக்களின் நலன்களைப் புறக்கணிப்பதாகும்.

தீவுப்பகுதியில் வாழும் ஒரு சில நூற்றுக்கணக்கான மக்களுக்கு வசதி செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, ஏனைய பல லட்சம் மக்களின் வசதிகளைப் புறக்கணிப்பதும் ஆகும். இப்போது யாழ்ப்பாண எம். பிக்கள் என்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்போர் யாழ்ப்பாண மாவட்ட மக்களை மறைமுகமாகத் தண்டிப்பதாகவும் இதனைக் கொள்ளலாம்.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகள், அபிவிருத்தி உடனடியாகத் தேவைப்படும் பகுதிகள் இராணுவ ஆதிக்கத்தின் கீழ் இல்லாத பகுதிகளே. அவற்றைப் புறக்கணிப்பது, குறைந்த நிதி ஒதுக்குவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

தமிழ் மக்கள் நலனில் அக்கறை உள்ளதாக வெளியே கூறிக் கொள்ளும் அரசு அதனைச் செயலில் காட்டுவது மிகவும் குறைவாகவே உள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட நிதியைச் செலவு செய்யும் எம். பிக்களின் சுதந்திரத்தில் அரசாங்கம் தலையிடுவதில்லை என்று ஒரு மரபு அல்லது விதி இருக்குமாயின் இராணுவ ஆதிக்கத்தில் இல்லாத பகுதிகள் புறக்கணிக்கப்படுவதை தவிர்க்கு முகமாக அரசு தானே விசேட நிதி ஒதுக்கலாம். ஜனாதிபதி நிதியிலிருந்தேனும் அந்த நிதியை வழங்கலாம அல்லவா?

பாதுகாப்புச் செலவுக்கென மேன் மேலும் நிதி ஒதுக்க முடியுமென்றால், அதற்கான பணம் அரசிடம் உண்டென்றால், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கு நிதி ஒதுக்க முடியாதா? அதற்குப்பணம் இல்லை என்று சொல்வதை ஏற்க முடியுமா?

இவ்வாறு செய்வதன் மூலமே யாழ்ப்பாண மக்கள் மீது தனக்கு இருப்பதாகக் கூறும் அக்கறையை சந்திரிகாவும் அவரது அரசும் நிரூபிக்க முடியும்.

முழுக்க முழுக்க, வெளிநாடுகள் அன்பளிப்புச் செய்யும் பணத்தைக் கொண்டே வடக்கு - கிழக்கைப் புனரமைப்புச் செய்வதற்குத் திட்டமிடும் அரசாங்கம் —

பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து யாழ்ப்பாண மக்களுக்கு கிடைக்காத பணத்துக்கு ஈடாக ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் வழங்கித் தமது நேர்மையை நிரூபிக்கலாம். இதனை ஓர் அரிய சந்தர்ப்பமாகக் கொண்டு சந்திரிகா அவ்வாறு செய்வாரா? வாயால் பேசாமல், செயலில் காட்டுவதன் மூலமே நம்பிக்கையை வளர்க்க முடியும்.

# ஒரு வாக்காளர் இரு கட்சிகளுக்கு வாக்களிப்பு முறை பற்றி ஆராய்வு

## தேர்தல் முறையில் மாற்றம் வரலாம்

கொழும்பு, ஏப். 7

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றி அமைத்து —

மாவட்ட ரீதியாக ஒரு வாக்காளர் இரண்டு அரசியல் கட்சிகளைச் சார்ந்த இரு வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வாய்ப்பளிக்கும் யோசனை ஒன்றை அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவித்தன.

சிறிய அரசியல் கட்சிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயே வாக்காளர் ஒருவர் இரு கட்சிகளுக்கு வாக்களிக்கும் முறை குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

இதேவேளை —

தேர்தல் தொகுதிகளை புதிதாக அமைப்பதற்கு அவற்றின் எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் யோசனையையும் அரசு முன்வைக்கவுள்ளது.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் விரைவில் சமர்ப்பிக்க இருக்கும் இரண்டாவது அறிக்கையில் இந்த யோசனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்றும் அரச வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-ஐ]

திருத்தச்சட்டமூலம் வருகின்றது:

# நகரசபைப் பகுதிகள் விரைவில் தரம் உயரும்

கொழும்பு, ஏப். 7

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், சில நகரசபை பகுதிகளை மாநகர சபை தரத்திற்கு உயர்த்துவதற்கு வழி பிறக்கும்.

கூட்டுறவுத்துறை, மாகாண சபைகள், சுதேச வைத்தியத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தை திருத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் வழங்கியது.

இச்சட்டத்தை திருத்துவதற்கான அவசியம் பற்றி அமைச்சர் தொடங்கொடா அமைச்சரவைக்கு விளக்கிக் கூறியிருந்தார்.

இச் சட்டத்தைத் திருத்த வேண்டியதன் அவசியம் பற்றி பல்வேறு அரசியல் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும், மக்களும் சுட்டிக்காட்டி இருந்தனர்.

தற்போதுள்ள சட்டத்தைக் கொண்டு தேவையான மாற்றங்களைச் செய்ய முடியாது.

நகரசபைகள், மாநகர சபைகளாக தரம் உயர்த்தப்படும் போது வரியிறுப்பாளர்களுக்கு கூடுதலான வசதிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ஐ 5-4)

அலரி மாளிகையில்

# கைதான இளைஞனிடம் வெளிநாட்டு 'கரன்ஸிகள்'

கொழும்பு, ஏப். 8

அலரி மாளிகைக்குள் கடந்த சனிக்கிழமை அத்துமீறி நுழைந்த இளைஞனிடம் கடவுச்சீட்டு மற்றும் வெளிநாட்டுக் கரன்ஸிகள் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டல் ஒன்றினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ஒன்றையும் பொலிஸார் இவரிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

மோகன் ரவி புருக்னிட் என்ற இந்த இளைஞனின் தகப்பன் பறங்கிய இனத்தவர் என்றும், தாய் சிங்கள இனத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

அலரி மாளிகைக்கு வெளியேயும், உள்ளேயும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த போதும் இவர் எப்படி உள்ளே சென்றார் என்பது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த இளைஞன் உண்மையில் சித்தசுவாதீனமற்றவரா என்பதை அறிவதில் பொலிஸார் தற்போது ஈடுபட்டுள்ளனர். (இ-3)

# அலரிமாளிகை பாதுகாப்பு மீண்டும் மறுசீரமைப்பு

கொழும்பு, ஏப். 8

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீண்டும் மறுசீரமைக்கப்படவிருப்பதாக பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இளைஞன் ஒருவன் அலரிமாளிகைக்குள் நுழைந்த சம்பவத்தை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைமீண்டும் மறுசீரமைக்கப்பட விருப்பதாக அவர் தெரிவித்தார்.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் அலரி மாளிகையின் காவலுக்கு இருந்த சிப்பாய் ஒருவரிடம் வெடி மருந்து கண்டு பிடிக்கப்பட்டதும்—

அதனை அடுத்து அலரி மாளிகையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மறு சீரமைக்கப்பட்டதும் தெரிந்ததே.

தற்போது இளைஞன் ஒருவன் அலரி மாளிகைக்குள் நுழைந்த சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மீண்டும் மறுசீரமைக்கப்பட உள்ளன. [இ-3]

## பெண்களுக்கான யோகாசன செய்முறை

யாழ்ப்பாணம், ஏப். 8

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் நடத்தும் பெண்களுக்கான விசேட யோகாசன செய்முறை, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில், திவ்யஜீவன சங்க உபதலைவர் திருமதி கமலா சனி சூரசங்காரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய ஆலோசகர் டாக்டர் திருமதி ஜே. கணேசமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் செல்வி வசந்தி தேவராஜா திருமதி நா. செல்வநாயகம் ஆகியோரும் கலந்து கொள்வார். [ஐ-4]

## புலிகளின் குரல் வானொலியில்

08 — 04 — 1995

சனி இரவு

- ★ 8-02 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கலந்துரையாடுவோம் "தமிழீழத்தில் உற்பத்தியின் அவசியம்"

09 — 04 — 1995

ஞாயிறு காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — களத்தில்மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — களத்தில்மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

சனி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — அறிவியல் வினாடி வினாப்போட்டி
- ★ 6-00 — சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- ★ 6-02 — பாமாலை
- ★ 6-15 — என் தெரிவு

# பிரபா தேவையை நிறைவேற்றவே புதிய அரசமைப்பு உருவாகிறது

## தினேஷ் குணவர்த்தனா பிரசாரம்

கொழும்பு, ஏப். 8

பிரபாகரனின் தேவைகளை நிறைவேற்றிக்கொடுக்கும் வகையில்தான் புதிய அரசமைப்பை உருவாக்க ஆயத்தமாகிறார்கள். இதனைப் பற்றிப் பேசும் போது எம்மை இனவாதிகள் என்று சொல்கிறார்கள்

காலியில் நடைபெற்ற மக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது திரு. தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம்மை இனவாதிகள் என்று கூறிய போதும் இது சம்பந்தமான அறவுறுத்தல்களை நாம் மக்களுக்கு அளிக்க வேண்டியுள்ளது. பொதுக் கூட்டங்களை வைத்து மக்களுக்கு விளக்கவுள்ளோம்—

அன்று வடக்கு — கிழக்கை ஒன்றிணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோர்தான் இன்று அதனை ஒன்றிணைக்க வேண்டுமெனக் கூறுகிறார்கள் — என்றும் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார். [அ-7]

மண்டூர் சம்பவம்

# நடவடிக்கை எடுப்பதாக அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு ஏப். 8

மட்டக்களப்பு மண்டூரில் விடுதலைப் புலிப்போராளியான லெப்டினன்ட் சிறிநிவாசன் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுப்பதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

பொலீஸாரால் தாக்கப்பட்ட அந்தப் போராளி பின்னர் 'சயனைட்' அருந்தி மரணமானதும்—

இந்த செயலை கண்டித்து திரு. தமிழ்ச்செல்வன் அனுருத்தவுக்கு கடிதம் அனுப்பியதும் தெரிந்தவையே. (இ-3)

## சைக்கிள் இலக்கத் தகடு

யாழ்ப்பாணம், ஏப் 8

இந்த ஆண்டுக்கான சைக்கிள் இலக்கத் தகடுகளை இதுவரை பெறாதவர்கள் யாழ். மாநகராட்சி மன்றத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றுயாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் மாநகர ஊழியர்கள் வீடுவீடாகச் சென்று சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளை விநியோகித்து வருகின்றனர்.

# சுகாதாரத் தகவல்களையும் தரும் மருத்துவபீட அறிவியல் கண்காட்சி

இன்றைய காலத்துக்குத் துக்கேற்ற வகையில் மக்களிடையேசுகாதார விழிப்புணர்வையும் தம்மைப் பற்றிய சுய அறிவையும் ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த நோக்கில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடமும் விஞ்ஞான மன்றமும இணைந்து ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளன. இந்தக்கண்காட்சி யாழ். மருத்துவ பீடத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரமபமானது நாளை ஞாயிற்றுக் கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இக்கண்காட்சி பற்றிய தொகுப்பு இங்கே பிரசுரமாகி உள்ளது.

இன்று உயர்தர வகுப்பில் உயிரியலைக் கற்பவர்கள் தவிர ஏனையோர் உடலமைப்பியல் தொடர்பான விரிவான அறிவு இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

உயிரியல் பிரிவு மாணவர்கள் கூட பரிசோதனைகளாக தேரை, கரப்பான்களின் உடலமைப்பை ஆராய்கிறார்களே தவிர மனித உடலமைப்பியலை அவர்கள் ஏட்டுக்கல்வியாகவே பெறுகின்றனர்.

ஒவ்வொரு தொகுதிகளையும் தனித்தனியே படிக்க முடியும். ஆனால் கூட்டாக அவை எவ்வாறு உள்ளன என்பதை பரிசோதனை வாயிலாகவே விளக்க முடியும். இதற்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த கண்காட்சி அமைகின்றது.

முக்கியமான பாகங்கள் மனிதனிலிருந்தே எடுக்கப்பட்ட பகுதிகள், மாதிரியுருக்கள், விளக்கப்படங்கள், குறிப்புகள் என்பவற்றுடன் காணப்படுகின்றன.

அவை தவிர அந்த உறுப்புகளின் நோய்கள் ஏற்பட்ட நிலைகள் உதாரணமாக கட்டிகள், சிழ், புற்று நோய் ஏற்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

நரம்புத் தொகுதி

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம், மூளையும் அதனுடைய தொடர்ச்சியாக முண்ணாணும் காணப்படும்

இதுபற்றிய விவரணங்களே எமக்கு முதலில் கிடைக்கின்றன. தொடர்ந்து மூளையில் ஏற்படும் கசிவுகளால தோன்றும் கட்டிகள் —

அவற்றை மருத்துவ ரீதியில் எப்படி அகற்றுகிறார்கள் என்ற விளக்கம் —ஆகியவையும் அளிக்கப்படுகின்றன.

புலன் அங்கங்களான காது, கண் அமைப்புகளில் உள்ள குறைபாடுகள் குறிப்பாக பூப்படலம் என்று சொல்லப்படும் கட்காசம் என்பது என்ன? அது எவ்வாறு கண்பார்வையை பாதிப்படையச் செய்கின்றது அதனை சிகிச்சை மூலம் எவ்வாறு நிவர்த்தி செய்கின்றார்கள் என்பன விளக்கப்படுகின்றன

நரம்பு மண்டலத்தில் ஏற்படும் ஒரு சிறு சிதைவும் ஒரு மனிதனின் செயலிழப்பை எவ்வாறு ஏற்படுத்தும் என்று உணர முடிகிறது.

அடுத்த பகுதியில் சிறுநீரக — சனனி அங்கங்கள் பற்றிய விவரணங்கள் இடம் பெற்றிருந்தன

இந்த பகுதியில் மனிதனில் படித்த பெரிய [illegible] மையாகவே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கற்கள் படிவடையும் பகுதிகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

உளவியல் பகுதி

உளவியல் பகுதி, உளவியல் பற்றிய ஒரு சிறு அறிமுகத்துடன் ஆரம்பமாகின்றது.

விடயங்களை நினைவில் பதித்தலும் மீள எடுத்தலும் பற்றிய விளக்கங்கள் இங்கு கூறப்பட்டன

குறிப்பாக மாணவர்கள் படிக்கும்போது பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய சூழ் நிலைகள்பற்றி இங்கு அளிக்கப்பட்டவிளக்கம் மிகவும் எளிமையான முறையிலும் விளங்கும் வகையிலும் அமைந்திருந்தது.

இந்த உளவியல் பகுதிக்கே முக்கியமான அம்சம் வாய்மொழி மூல விளக்கம் தான். உளவியலை படம் போட்டோ எழுதியோ விளக்க முடியாது. இந்த பகுதிக்கு செல்பவர்கள் இது பற்றி தமக்கு ஏற்படும் சந்தேகங்களை கேட்டு நிவர்த்தி செய்து விடவேண்டியது மிகவும் அவசியம்

இந்த பகுதியில் தொடர்ந்து குழந்தை பருவம் முதல் மூப்புப் பருவம் வரையிலான படிமுறை மனவளர்ச்சி நிலைகள், ஒவ்வொரு பருவத்தினரையும் கையாள, அணுக வேண்டிய முறைகள், தொடர்ந்து உறக்கமும் கனவும், மது, சிகரெட் பாவனைகளால் ஏற்படும் விளைவுகள், அவை தவிர்க்கப் படவேண்டியதன் அவசியம், உளத்தாக்கங்களை மக்கள் வெளிப்படுத்தும் விதங்கள், உளவியல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் முறைகள் என்பன விளக்கப்பட்டன.

அடுத்து சுவாச, சுற்றோட்ட தொகுதிகள் குருதி, இதயம், நுரையீரல் தொடர்பான விவரங்களை இங்கே பெற முடிகின்றது.

இங்கு பல் நோய்கள் பற்றியும் பற்களைப் பேணும் முறைகள் பற்றியும் பற்களின் முக்கியத்துவம், பற்களை அடைத்தலும் புதிதாக பற்களை கட்டுதலும், கைசூப்பும் குழந்தை பல்லை மிதக்கச் செய்யும் இதற்கான நிவாரணி. தொன்மையான பல்சிகிச்சை உபரணம் என்பன இங்கு காணப்பட்டன.

அடுத்து கானில் சுரப்பிகள்— அகஞ்சுரப்பிகள்—அதாவது ஓமோன்கள் பற்றிய விவரணம இங்கு காணப்பட்டது.

சுகவாழ்வு

7 வகையான நச்சுப் பாம்புகள், பாம்புக்கடியும் முதலுதவியும், செப்ரிசீமியா என்பது என்ன? ஏன் ஏற்படுகின்றது? யாரைத்தாக்கலாம் என்ற தகவல்களும் இதே போன்ற ஏனைய கொலரா போன்ற நோய்கள் விசர்நாய்கடி தொழுநோய் தொடர்பான அறிவுறுத்தல்கள் தரப்பட்டன.

எயிட்ஸ் என்ற அரக்கனின் எச்சரிக்கை சுகவாழ்வுக்கான போசணை முறைகள் சுகாதார நடத்தைகள் தேகாப்பியசங்கள் குறிப்பாக யோகாசனங்கள் தியானங்கள் இவற்றின் பலன்கள் நீரிழிவு நோய் தொடர்பான விவரங்கள் என்பன தரப்பட்டன.

பலவிடையங்கள் யாரையும் கேட்க வேண்டிய தேவையில்லாமல எழுதிலேயே காணப்படுகின்றன

இவைதவிர ஒருவரின்; உணர்திறனை, குருதி அழுக்கம் மனோதிடத்தை உறுதி செய்யும் கருவிகளும் நுண்ணறிவை பரீட்சிக்கும் களமும் காணப்படுகின்றன.

உயர்தர மாணவர்களுக்கும் தம்மைப்பற்றி அறிந்து வைத்திருக்க விரும்புவோருக்கும் இது பேருதவியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. (இ-14)

## கறிமிளகாய் நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், 8

கறிமிளகாய் இம்முறை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது

அளவெட்டி, மல்லாகம் ஊரெழு போன்ற பகுதிகளிலேயே கறிமிளகாய் செய்கை மேற்கொள்ளப்பட்டது. (8-17)

# பாதிக்கப்பட்டோர் விவரம் சேகரிப்பு

தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோர் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடராக, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், இன்று சனிக்கிழமை அரியாலை கிழக்கு கிராம சேவர் பிரிவுக்கு— நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, சனசமூக நிலையங்களிலும் —

10 ஆம்திகதி கொண்டாவில் தென் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு ஜே/123 அலுவலகத்திலும்—

11 ஆம் திகதி வண்ணார் பண்ணை வடக்கு வண்ணார் பண்ணை வடமேற்கு,கொண்டாவில் தென் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு அவ்வப்பகுதி கிராம சேவகர் பிரிவு அலுவலகங்களிலும்—

12 ஆம் திகதி, அரியாலை வட மேற்கு, அரியாலை மேற்கு மத்தி, அரியாலை தென்மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு அவ்வக் கிராம சேவகர் பிரிவு அலுவலகங்களிலும்பாதிப்பு குறித்த விவரங்கள் சேகரிக்கப்படும்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவு—சங்கானை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் எதிர்வரும் பத்தாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை— சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் மேற்படி பாதிக்கப்பட்டோர் விவரங்கள் திரட்டப்படும்

# ஊட்டச் சத்து கல்வி பட்டப்பின் படிப்பு

## புதிதாக ஆரம்பிக்கத் திட்டம்

ஊட்டச் சத்து கல்விக் கென பட்டப் பின் படிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான உதவியை உலக வங்கி வழங்கும்.

உயர்கல்வி பிரதி அமைச்சர் விஸ்வ வர்ணபாலவும், உலக வங்கியின் பிரதிநிதி ரீற்றர் பெள்ளும் இது தொடர்பான ஆலோசனைகளில் நேற்று கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சியில் இத்தகைய பட்டப்பின் படிப்பு கல்வியை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியம் பற்றி உயர் கல்வி பிரதி அமைச்சர் விளக்கிக் கூறுனார்.

அபிவிருத்தி முயற்சிகளுக்கு உதவும் வகையில் இத்தகைய கல்வி நுவனங்களுக்கு உதவி வழங்குவதாக உலக வங்கி உறுதி அளித்து உள்ளது. (ஐ-14)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

யாழ். இந்துக் கல்லூரி

## மேலைத்தேய வாத்தியக்குழு

'பாண்ட்' வாத்தியக்குழு உறுப்பினர்கள் சகலரும் இன்று சனிக்கிழமை (08 - 04 - 1995) மாலை 4 மணிக்கு பயிற்சிக்காக கல்லூரிக்குச் சமூகம் தரவும்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(சி- 928)


# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை யோகேஸ்வரன் (ரவி)

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்தவரும், இல. 26, இரட்ணகாரா பிளேஸ், தெகிவளையில் வசித்து வந்தவரும், கொழும்பு இலங்கை வங்கியில் கடமையாற்றியவருமான தாமோதரம்பிள்ளை யோகேஸ்வரன் (ரவி) நேற்று தெகிவளையில் காலமானார்.

இவர் தேவியின் அன்புக் கணவரும், சஞ்சே, மிருணா ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் தாமோதரம்பிள்ளை தம்பதிகளின் மகனும், விக்கினேஸ்வரன், ஜெயலக்ஸ்மி, கங்காதரன், நித்தியலக்ஸ்மி, சோதிலக்ஸ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை [9-4-95] தெகிவளையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தம்பிராசா சிவபாக்கியம்
(பெரியதாய்)

179/1, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
[36124]

## செல்வி திரேசா ஞானபிரகாசம் [றோசா]

செல்வி திரேசா ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியை புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) 7-4-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சஞ்சு ஞானப்பிரகாசத்தின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பிறான்சிஸ்காபிள்ளையின் [ஆசிரியை] சகோதரியும், காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ் பிள்ளையின் மைத்துனியும், அன்றுப்பிள்ளையின் [ஜோ - நோர்வே] அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [8-4 95] சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு, அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. வி. இ. ஜெயக்குமார்
[மருமகன்]

22, புதுமை மாதா கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
[36010]

## சுப்பையா இராசையா

புளியங்கூடலை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசையா அவர்கள் 5-4-95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், விஜயகாந்தன், விஜயலட்சுமி, விஜயகுமாரி, விஜயேந்திரன், விஜயகாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 6-4-95 அன்று கொழும்பில் நடைபெற்றன இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. V. நாதன்

(36123)

## திருமதி துரைரத்தினம் அன்னை கஸ்தூரிபாய் [ராணி]

திருமதி துரைரத்தினம் அன்னை கஸ்தூரிபாய் [ராணி] நேற்று (07- 04- 1995) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் ஊறணி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துவேலு துரைரத்தினத்தின் அன்புத் துணைவியும், நடராசா - மங்கையர்க்கரசியின் அன்பு மகளும், ஜெயமதி (ரெத்தினா - போராளி), சௌரி, ஜெயகாந்தன், ஜெ குமார் [சோமன் - போராளி], தாஸ், ராம், ஜெயலெட்சுமி, ஜெ ரூபி ஆகியோரின் அன்புத் தாயாரும், வெ. இளங்குமரன் (போராளி - தமிழீழக் கல்விக்கழகம்), செல்வச்சந்திரன், குகதாஸ், சுழகராசா ஆகியோரின் அன்பு மாமியும், ஜமுனாதேவி, பார்த்தீபன், தர்ஷிகா, காஞ்சனா, கலையரசி ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பி. ப. 1 மணிக்கு ஊறணி பொது மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து ஜெயகாந்தன்

ஊறணி,
வல்வெட்டித்துறை.
(36122)

## சின்னையா சின்னத்துரை

புங்குடுதீவு - பெருங்காடு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 417, நாவலர் வீதியில் வசித்துவந்தவருமான சின்னையா சின்னத்துரை நேற்று இரவு சிவபதமடைந்துவிட்டார்.

இவர் ஆனந்தம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நாகம்மா, காமாட்சி, தங்கம்மா, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, நாகேசு, பரநிருசிங்கம் மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற பெரியதம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சு. துரைசிங்கம் (ப நோ கூ. சங்கம் - புங்குடுதீவு) அவர்களின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (8 4-95) சனிக்கிழமை பிற்பகல் 4மணியளவில் தகனக்கிரியைக்காகச் செம்பணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செ. கன. ரெத்தினம்
[BANKER]
[மருமகன்]

417, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(36125)

## இன்றைய இசை அரங்கில்

யாழ்ப்பாணம், ஏப் 8

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் ஸ்ரீகாமாட்சி இசை அரங்கில் இன்று சனிக்கிழமை இரவு 7-30 மணிக்கு செல்விகள் க. ஜீவராணி, யோ. சுபைதா, பா. நேசமலர், நா. ரேணுகா, வி. புஸ்பராஜி, ப. சத்யாயினி பா. சுமலதா, உ. ஜெயமலர் ஆகியோரின் பாட்டும் செல்வி இ. உமாராணி, திருமதி கி. நிரஞ்சலாதேவி ஆகியோரின் பாட்டும் இடம்பெறும். [ஐ-14]

★ ★ ★

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலய தர்மகர்த்தா சபையும் யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றமும் இணைந்து வழங்கும் இசையரங்கில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மா. பிரபாகரன் பாட்டு, 8 45 மணிக்கு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மாவின் கதாப்பிரசங்கம் என்பன இடம்பெறும். (ஐ-111)

## நரேயா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'நரோமா' தபால் சேவை தொடர்ந்து இவ்வாறு நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் — வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். சடாட்சரநாதன் தெரிவித்தார். [இ-4]

# இந்திய இழுவை படகுகளை புலிகள் கைப்பற்றினராம்

கொழும்பு, ஏப். 8

இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த 3 இந்திய இழுவைப் படகுகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர் என்று வடபகுதி அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

## கன்னியாகுமரியில் குண்டு வெடிப்பு:

# காயமடைந்த இளைஞர்கள் புலிச் சந்தேகநபர்களாம்

சென்னை, ஏப். 8

தமிழ்நாடு கன்னியாகுமரியில் குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர்.

அவர்கள் இருவரும் குண்டை தயாரித்துக்கொண்டிருந்த வேளையே இச் சம்பவம் இடம்பெற்றது என்று நம்பப்படுகிறது.

காயமடைந்த இளைஞர்களிடம் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் —

அவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ-14]

## யாழ். கோட்ட அதிபர்களுக்கு கூட்டம

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். கோட்ட, பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி கோட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [ஐ-14]

## புதிய கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப் 8.

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில், அலுவலக முகாமைத்துவம் பற்றிய அடிப்படை கற்கை நெறி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் ஆரம்பமாகும்.

இரண்டு மாதங்கள் இடம்பெறவுள்ள இந்தக் கற்கை நெறியின் முதலாவது தொகுதியில் 75 மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். (ஐ-14)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம் துடுப்பாட்ட இரசிகர் சங்கம் நடத்தும் 15 மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று காலை 8-30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராக பங்குபற்றுவார்.

இன்றைய போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ ஜொலிஸ்ரார் வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக் கழக வி. க. அணி.

★ உதயன் வி. க. அணி எதிர் கொக்குவில் சி. சி. சி. அணி.

★ ஜொனியன்ஸ் வி. க அணி எதிர் பற்றீசியன்ஸ் அணி.

★ சென்றலைட்ஸ் வி. க. அணி எதிர் மானிப்பாய் பரீஸ் வி க அணி. [இ-3-20]

## போதியளவு மா கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஏப் 8

யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தேவையான அளவு மாவை தற்போது பாவனையாளர் பெற்றுக் கொள்ளலாமென மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. கு. சிறில் தெரிவித்தார். [இ-4]

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப் 8

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளையின் "சைவ நற்சிந்தனைகள்" நூல் வெளியீட்டு அறிமுக விழா இன்று பகல் 11 மணிக்கு உரும்பராயில் நடைபெறவிருக்கிறது.

இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் வி. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நூல் அறிமுகத்தையும், யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சி சிவலிங்கராஜா அறிமுகஉரையையும் நிகழ்த்துவர். (இ-3)

## 'உதயன்' செய்தி குறித்து---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுதியவருக்கு அனுப்பும் — வழக்கமான பாணியில் அமைந்த — ஒரு பதிலே அந்தப் போட்டோ பிரதியில் இடம்பெற்றிருந்தது.

13 - 03 - 1995 திகதியிடப்பட்ட — ஜனாதிபதி செயலக கடிதத் தலைப்பில் அனுப்பப்பட்டிருந்த — அந்தக் கடிதம், யாழ் அரச அதிபருக்கு முகவரியிடப்பட்டிருந்தது.

"தங்களின் 27-02-1995 கடிதம் கிடைத்தது குறித்து, தங்களுக்கு அறிவிக்கும்படி ஜனாதிபதியால் எனக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைக்காக அந்தக் கடிதம் கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது." — இப்படி ஜனாதிபதியின் செயலாளரின் சார்பில் ஒப்பமிட்ட ஒருவரால் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### ஆசிரியர் குறிப்பு

1. நேற்று அவசரமாக ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்ட அரச அதிபர் தாம் அனுப்பிய மகஜர் அங்கு கிடைத்ததா என்பதை உறுதிப்படுத்தினாரா? அப்படியாயின் அதன் விவரத்தை அவர் ஏன் வெளியிடவில்லை?

2. பத்திரிகையில் செய்தி வெளியிடுவது சம்பந்தமாக எந்தப் பத்திரிகை மீதும் ஜனாதிபதி செயலகமோ அல்லது அரச அதிபரோ வேறு எவருமோ அழுத்தம் பிரயோகிக்க முடியாது என்பதை அரச அதிபருக்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

ஆகவே "இன்று செய்தி வெளியானது போல முன் பக்கத்தில் சரியான செய்தியை வெளியிட்டு அதன் விவரத்தை அங்கு உடன் அனுப்பி வைக்கும்படி" ஜனாதிபதி செயலகம் விடுத்த பணிப்புரையை அரச அதிபர் எப்படி ஏற்றுக்கொண்டார்? அதனை எப்படி நடைமுறைப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் அது குறித்து அரச அதிபர் பொதுக் கூட்டத்தில் பிரஸ்தாபித்திருப்பார்? — என்பன போன்றவை விளங்கவில்லை.

அரச அதிபரின் மறுப்பு இன்றைய உதயனில் முழுதாக வெளியிடப்பட்டிருக்கின்றது என்றால், அது ஜனாதிபதி செயலகத்தின் உத்தரவுக்காகவோ அல்லது அரச அதிபரின் அதிகார தோரணைக்காகவோ அல்ல என்பதையும் —

பத்திரிகை நெறிமுறைக்கு அமையவே அது பிரசுரிக்கப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் கடந்த மார்ச் 8ஆம் திகதி நடத்திய பேரணியின் முடிவில் வழங்கிய மகஜர் ஜனாதிபதியை சென்றடைந்தது பற்றியே நேற்றைய உதயனில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுபற்றியே யாழ். அரச அதிபரும் யாழ் இந்து நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

ஆனால் உரையின் முடிவில் மேடையில் இருந்த கல்வி மான்களிடம் அவர் விநியோகித்த கடிதத்தின் போட்டோ பிரதி பெப்ரவரி 27ஆம் திகதி அவர் அனுப்பிய கடிதம் ஜனாதிபதி செயலகத்துக்குக் கிடைத்தது பற்றியே குறிப்பிட்டிருந்தது

மார்ச் 8 ஆம் திகதி மகஜர் பற்றிய பிரச்சினை எழுந்துள்ள வேளையில்—

அதற்கு முந்திய (பெப்ரவரி 27ஆம் திகதிய) கடிதத்துக்கும் சம்பந்தம் என்ன?

மார்ச் 8 ஆம் திகதிய மகஜர் முன்கூட்டியே பெப்ரவரி 27ஆம திகதியே அரச அதிபரின் கைக்குக் கிடைத்துவிட்டதா?

அல்லது மேடையில் இருந்தோருக்கு போட்டோ பிரதிகளை விநியோகித்ததன் மூலம் அங்கிருந்தோரையும் அதனைப்பார்த்துக் கொண்டிருந்தவர்களையும் தவறான திசையில் திருப்ப அரச அதிபர் முயன்றாரா? — விளங்கவில்லை. [உ]

## உதயன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கருதியும் இந்நிறுவனத்தின் பொறுப்பான ஓர் உத்தியோகத்தரிடம் கலந்தாலோசித்துச் செய்திகளைச் சரிபாகவும், உண்மையாகவும் பிரசுரிக்கப்படுவதை நான் விரும்புகிறேன்.

தங்கள் சேவையில் உள்ள, க. பொன்னம்பலம் அரச அதிபர்.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"செய்தி" என்ற தலைப்பில் அவர் அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

"அரச அதிபருடாக அனுப்பிய மகஜர் ஜனாதிபதியைச் சென்றடையவில்லை" என்ற தலைப்பில் 1995 - 04 - 07 ஆந் திகதிய உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி சம்பந்தமாகப் பொதுமக்களின் தகவலுக்காகப் பின்வரும் விடயங்களைத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

வெட்டுப்புள்ளி முறையால் பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ் மாணவர்களால் மேதகு ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக எமது அலுவலகத்தில் 1995 - 03 - 08 ஆந் திகதி நண்பகல் 12 30 மணியளவில் கையளிக்கப்பட்ட மகஜர் எனது சிபார்சுடன் மேதகு ஜனாதிபதிக்கும், கல்வி உயர் கல்வி கௌரவ அமைச்சர் ரிச்சாட் பத்திரன அவர்களுக்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும், யாழ். துணைவேந்தருக்கும் அன்றைய தினமே [1995 - 03 - 08] எனது ஜே. எல்./ஏடிஎம்/பி/47 இலக்கக் கடிதம் மூலம் ஒரு செயலக நிர்வாகி மூலம் கிளாலியூடாகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டு, அவரால் கடுகதிப் பதிவுத் தபால் 1995 - 03 - 10 ஆந் திகதி கொழும்பு மாநகரசபைத் தபால் அலுவலகத்தில், 5037, 5038, 5039 இலக்கங்களின் கீழ் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் கடிதம் அவரிடம் நேரில் கையளிக்கப்பட்டது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு

1. நேற்றைய உதயனில் வெளியான செய்தி தவறானது என அரச அதிபர் தமது கடிதத்தில் திட்ட வட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்

சம்பந்தப்பட்ட மகஜர் தமது கையை வந்தடையவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா தம்மைச் சந்தித்த மாணவர்களிடம் திட்ட வட்டமாகக் கூறியிருந்ததையே நாம் நேற்றைய செய்தியில் பிரசுரித்திருந்தோம்

இச்செய்தி தவறு என்று குறிப்பிடுவதன் மூலம் —

ஜனாதிபதி சந்திரிகா அப்படிக் கூறவில்லை என்று அரச அதிபர் தெரிவிக்கின்றாரா? அல்லது மகஜர் கிடைத்திருந்தும் தமக்குக் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி பொய் கூறுகின்றார் என்பதை அரச அதிபர் கூற முற்படுகின்றாரா?

"செய்தி தவறு" என மொட்டையாகக் குறிப்பிட்ட அரச அதிபர் இதனைத் தெளிவு படுத்துவாரா?

சம்பந்தப்பட்ட மகஜர் தமது கைக்கு கிடைக்கவில்லை என ஜனாதிபதி பாதிக்கப்பட்ட மாணவர்களிடம் கூறினார் என்பதை எமது கொழும்புச் செய்தியாளர் மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

2. செயலகம் சம்பந்தமான செய்திகளை செயலக அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து பிரசுரிக்கப் படுவதைத் தாம் விரும்புவதாக அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீனப் பத்திரிகையான உதயன் எந்தச் செய்தியையும் எவரிடம் ஆலோசனை பெற்று பிரசுரிப்பதுமில்லை. பிரசுரிக்க விரும்புவதும் இல்லை. அது பத்திரிகை நடைமுறையும் அல்ல.

எனினும் செய்திகளை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வது சாலச் சிறந்தது என்பதுஎமக்குத்தெரியும் எனினும்மேற்படி செய்திசம்பந்தமாக

[அ] செய்தி கொழும்பில் ஜனாதிபதி தமக்கு மகஜர் கிடைக்காதது பற்றி பிரஸ்தாபிப்பதால் அதனை யாழ்ப்பாணத்தில் யாரிடமும் உறுதிப்படுத்தும் தேவை எங்களுக்கு இருக்கவில்லை.

[ஆ] யாழ் செயலகத்தில் உள்ள மூத்த அதிகாரி ஒருவரே சிலதினங்களுக்கு முன்னர் நான் முதலில் கூறிய விடயத்தை கூறவில்லை என பின்னர் மறுத்ததோடு எமது மூத்த செய்தியாளரை "பொய்யன்" என எமது நிர்வாகியிடம் வர்ணித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் —

செய்திகள் குறித்து அந்த அதிகாரியோடு கலந்தாலோசிப்பது எப்படி? கலந்தாலோசித்தாலும் அத்தகைய அதிகாரிகள் முன்னர் கூறுவதை பின்னர் மறுக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? — என அரச அதிபரிடம் வினவ விரும்புகிறோம்.

எமது நேற்றைய செய்தியில் விடுக்கப்பட்ட கோரிக்கைப் பிரகாரம், நிலைமையைத் தெளிவுபடுத்த முயன்றமைக்காக அரச அதிபருக்கு நன்றி கூற விரும்பும் அதேசமயம் தற்போது நாம் எழுப்பியுள்ள சந்தேகங்களுக்கும் அவர் பதிலையும் எதிர்பார்க்கிறோம். (ஆ-ர்)


## றோட்டறக்ட் தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு

தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி கருத்தரங்கு இன்று நடைபெறமாட்டாது.

இளைஞர் சேவை இயக்குநர்
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/927)


# முடிவு காணப்படாத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீடிப்பதற்கு தீர்மானித்தோம்.

ஆகவே, எதிர்வரும் நான்காம் கட்ட சுற்றுப்பேச்சு உங்களது முடிவுகளை உடன் நடைமுறைப்படுத்துவது பற்றியும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வைப்பது பற்றியுமே முக்கிய கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கிறோம் 19 ஏப்ரல் 1995க்கு முன்னராக உங்கள் முடிவுகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளும், மற்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும், இடம்பெறுமென நாம் நம்புகிறோம்.

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அதிமுக்கியமானவை என்பதால், இப்பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டதன் பின்னரே இப்பிரச்சினைக்கு அடிப்படையான அரசியல் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என நாம் விரும்புகின்றோம் எமது மக்கள் மீது விதிக்கப்பட்ட தடைகள், கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதும், போர் நிறுத்தம் நிலையானதாகி உறுதியான சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதும், அதன் பின்னரே உயர்மட்ட ரீதியில் அடிப்படையான அரசியல் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடாகும். எனவே இன்றைய சூழ்நிலையில் அரசியல் பேச்சுக்களுக்கான கால அட்டவணை, நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது போன்ற விடயங்கள் பற்றி பேசுவது உகந்தது அல்ல என்றே நாம் கருதுகிறோம்.

அன்புடன்

உங்கள் நேர்மையுள்ள
[வே. பிரபாகரன்]
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்


சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தார் வழங்கும்
மாபெரும் மகத்தான
## மலிவு விற்பனை

| | |
|---|---|
| சில்க்பொலிஷ்ரர் | |
| பிளேன் கலர் 44'' மீற்றர் | 50/- |
| விஸ்கோஸ் பிரின்டட் 44'' | 100/-, 115/- |
| கைபிறைற் பொலிஷ்ரர் | |
| பிரின்டட் 36'' | 38/- |
| சாறிவகைகள் | 240/- 475/- 490/- |
| பத்திக்சாரம் | 110/- |
| டெனிம் கவுண் | 175/- |
| போய்ஸ் சேட் | 100/- 120/- |
| போய்ஸ் சோட்ஸ் | 50/- |
| போய்ஸ் ஜீன்ஸ் | 75/- |

14 · 04 · 1995 வரை மட்டும்

த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
156, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
[3611‍?]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 391/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 04 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது